Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 32 புதன்கிழமை (16.07.2014) பக்கங்கள் 20 ஓசை – 288

## யாழிலிருந்து சென்றபேருந்து வேகக்கட்டுப்பாட்டை இழந்தது

### வவுனியாவில் ஒருவர் பலி

(வவுனியா)

வவுனியா, ஓமந்தை,பன்றிக்கெய்தகுளம் ஏ-9 வீதியில் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி வந்த தனியார் பேருந்து மோதியதில் ஒருவர் மரணமானார் ஒருவர் காயமடைந்ததாக ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மாலை 5.30 மணியளவில் யாழ்.நகரில் இருந்து வவுனியா நோக்கி வந்த தனியார் பேருந்து ஓமந்தை, பன்றிக்கெய்தகுளம் பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து முன்னே சென்ற துவிச்சக்கரவண்டியுடன் மோதியது.

இதனால் துவிச்சக்கரவண்டி ஓட்டுநர் தடுமாறிய போது அருகில் சென்ற மோட்டார் சைக்கிளுடனும் பேருந்து மோதி இந்த விபத்து ஏற்பட்டது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த சு.அரசரட்ணம் (வயது 65) என்பவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

துவிச்சக்கரவண்டியில் பயணித்தவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான விசாரணைகளை ஓமந்தைப பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (70)

## முரசுமோட்டையில் விபத்து, தந்தை பலி, மகன் படுகாயம

(முரசுமோட்டை)

கிளிநொச்சி முரசுமோட்டைப்பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த, வேளை, டிப்பர் வாகனத்துடன் மோதுண்டதில், தந்தை உயிரிழந்ததுடன் மகன் படுகாயம் அடைந்தார்.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் தெல்லிப்பளையைச்சேர்ந்த சின்னத்தம்பி சண்முகரட்ணம் (வயது-58) என்பவரே உயிரிழந்தவராவார் அவரது மகனான சண்முகரட்ணம் தீபன் (வயது-28) படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பரந்தன்- முல்லைத்தீவு வீதியில் இவர்கள் பயணம் செய்த மோட்டார் சைக்கிளுடன் முரசுமோட்டைப்பகுதியில் டிப்பர் வாகனம் மோதியதிலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைகக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஏழாலை கிணற்றிலிருந்து குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

ஏழாலைப் பகுதியில் கிணற்றில் இருந்து ஆண் ஒருவரது சடலம் மீட்கப்பட்டு காங்கேசன் துறைப்பொலிஸாரினால் யாழ். போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஏழாலையில் வசித்துவந்தவரும் மண்டைதீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவருமான சின்னராசா - தர்மபாலன் (வயது- 57) என்ற குடும்பஸ்தரின் சடலமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவர் மது அருந்தியநிலையில் கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது. பொலிஸ் மற்றும் சட்டவைத்திய அதிகாரிகள் பரிசோதனையை அடுத்து சடலம் நேற்று நண்பகல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

## பிரிவினையை ஏற்படுத்தமாட்டோமென

# சத்தியக்கடதாசி சமர்ப்பிக்க கூட்டமைப்பிற்கு உத்தரவு

(கொழும்பு)

நாட்டில் பிரிவினை ஏற்படுத்தப்படாதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சத்தியக்கடதாசி வழங்கவேண்டுமென உயர் நீதிமன்றம் நேற்றையதினம் உத்தரவிட்டுள்ளது.

வடக்கு மாகாணசபைத்தேர்தலின்போது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கை பிரகடனத்தின் ஊடாக இனவாதம் தூணடப்படுவதாக தெரிவித்து தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர உள்ளிட்ட சிலரால் 7 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இது தொடர்பாக வழக்கு விசாரணை நேற்று உயர் நீதிமன்றில் இடம்பெற்ற போது பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் இந்த உதரவைப் பிறப்பித்துள்ளார்.

மனு மீதான விசாரணை இடம்பெற்ற போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் சட்டத்தரணியும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாகி வாதாடினார்.

கூட்டமைப்பின் கொள்கை வெளியீட்டின் ஊடாக நாட்டை

(19) ஆம் பக்கம் பார்க்க

## பதவி விலகமாட்டேன் முதல்வர் விக்கி தெரிவிப்பு

பதவி விலகப்போவதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். மாகாண முதலமைச்சர் பதவியை விக்னேஸ்வரன் துறக்கப் போவதாக ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருந்தன. எனினும், இவ்வாறான ஓர் கருத்தை தாம் முன்வைக்கவில்லை என விக்னேஸ்வரன் மறுப்பு வெளியிட்டுள்ளார். வடமாகாண ஆளுநராக ஜீ.ஏ.சந்திரசிறியை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீளவும் ஐந்து ஆண்டு காலம் பதவியில் அமர்த்தியமைக்கு எதிர்ப்பை வெளியிட்டு விக்னேஸ்வரன் பதவி விலக உள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், இவ்வாறு தாம் யாரிடமும் பதவி விலகுவது குறித்து அறிவிக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்த பெரும்பான்மைச் சமூகம் முன்வரவேண்டும்



நாட்டில் தேசிய ஒருமைப்பாடடினை ஏற்படுத்துவதற்கு பெரும்பான்மைச் சமூகம் முன்வரவேண்டும் என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு

### அமைச்சர் வாசு கோரிக்கை

அமைச்சர் வாசுதேவநாணயக்கார தெரிவித்துள்ளார் நேற்றையதினம் கிளிநொச்சியில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் வடமாகாண மத்திய நிலையத்தினை கிளிநொச்சியில் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இனங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இந்த மத்திய நிலையம்

(19) ஆம் பக்கம் பார்க்க

## கொலைச்சம்பவத்துடன் தொடர்பு வடமாகாணசபை உறுப்பினர் சயந்தனின் கொடும்பாவி எரிப்பு

யாழ். சாவகச்சேரி ஆதார வைததியசாலையில் வைத்து கடந்த 5 ஆம் திகதி ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டமைக்கும், வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனுக்கும் தொடர்பிருப்பதாகக்கூறி சயந்தனின் கொடும்பாவி நேற்று எரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவத்தில் உயிரிழந்த 26 வயதுடைய எஸ்.அன்பழகனின் உறவினர்கள் மற்றும் நண்பர்களினாலேயே இந்தக் கொடும்பாவி எரிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் பெற்றோர்,

(19) ஆம் பக்கம் பார்க்க



## முச்சக்கரவண்டி உரிமையாளருக்கு மரண சகாய நிதி உதவித்திட்டம்

### ஆரம்பித்து வைக்கிறார் அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

முச்சக்கரவண்டி உரிமையாளர்களின் குடும்பநலன் கருதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிதி உதவியுடன் கூடிய மரண சகாய நிதி உதவித்திட்ட அங்குரார்ப்பணம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நீராவியடி இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி அரங்கில் நடைபெறவுள்ளது. சங்கத்தலைவர்

(19) ஆம் பக்கம் பார்க்க

## நியதிச் சட்டவரைபுகளை விரைவில் சமர்ப்பிப்பார் ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணசபையின் நியதிச் சட்ட வரைவுகளை விரைவில் தமக்கு அனுப்பி வைப்பதாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி அறிவித்துள்ளதாக வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் நேற்றைய அமர்வின் போது தெரிவித்தார்.

வடமாகாணசபையின் நியதிச் சட்ட வரைவுக்கான நிதி ஆணைக்குழு மற்றும் சட்ட ஆணைக்குழு

(19) ஆம் பக்கம் பார்க்க

உள்ளே → க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான ஆங்கிலபாட வினாத்தாள்

# நேற்றைய மாகாணசபை அமர்வில் மூன்று பிரேரணைகள் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையில் 12 ஆவது அமர்வு நேற்று இடம்பெற்றபோது 3 பிரேரணைகள் முன்மொழியப்பட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

வடக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பல தனியார் கல்வி நிலையங்களில் மாணவர்களின் இயற்கை உபாதையை தணிக்கக்கூடிய மலசல கூடங்களோ, குடிநீரோ இல்லாத நிலையுள்ளதோடு சில தனியார் கல்வி நிலையங்களில் தகுதியற்ற ஆசிரியர்களின் கல்வி புகட்டல்களையும் காணக்கூடியதாகவுள்ளது.

இதேநேரம் வடக்கு மாகாணத்துக்குட்பட்ட கணனி நிலையங்கள் பல தகுந்த தரமுடைய ஆசிரியர் இன்றி நடத்தப்படுவதாகவும், தங்களது சான்றிதழ்களைப் பயன்படுத்தி அவுஸ்ரேலியா, பிரத்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகளக்குச் செல்லலாம் என துண்டுப்பிரசுரங்களையும் வெளியிடுகின்றன. இவை எமது நாட்டில் கூட வேலைவாய்ப்புக்கு ஏற்புடையதல்ல என நிறுவனங்கள் திருப்பி அனுப்புவதையும் காணலாம்.

இது சார்ந்த அமைச்சு கல்வித் தரத்தையும் , கற்பித்தல் தரத்தையும் துறைசார் கல்வியாளர்களையும் நியமித்து தரச் சான்றிதழ் வழங்கி முழுமையான கல்விச் சேவையை மாணவர்கள் அடைய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற பிரேரணையையும்,

பறவைகள் சரணாலயம் இனம் காணப்பட்ட வன்னேரிக்குளம், கரைச்சி பிரதேசசபை எல்லைக்குள் இருப்பதனால் அவ்விடத்தில் பறவைகள் சரணாலயமாக வடக்கு மாகாண சபை சட்டபூர்வமாக பிரகடனப்படுத்தி விரைவில் மக்களின் பயன்பாட்டுக்கு விடுவதன் மூலம் போரினால் பாதிக்கப்பட்ட மக்களை ஆற்றுப்படுத்த முடியும் எனக் கோரும் பிரேரணையையும்,

கிளிநொச்சி பொதுச் சந்தைக்கு முன்பாக சிறுவர் பூங்கா யு.எஸ்.எயிட் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டது. மக்கள் பாவனைக்கு விடப்பட்டபோதும் இதுவரை இப்பூங்கா கரைச்சி பிரதேச சபையிடம் ஒரு வருடத்திற்கு மேலாகியும் இது கையளிக்கப்படவில்லை.

எனவே இப்பூங்காவை கரைச்சிப் பிரதேச சபையிடம் கையளிக்க வேண்டும் எனக்கோரும் பிரேரணையையும் சு.பசுபதிப்பிள்ளை முன்மொழிந்தார். இவற்றை உறுப்பினர் அரியரட்ணம் வழிமொழிந்து ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

து.ரவிகரன், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரினால் மேலும் 4 பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டபோதிலும், அவ்விருவரும் சமுமளிக்காமையால் அவை நேற்றைய அமர்வில் பிரேரிக்கப்படவில்லை. (இ)

# மீனவர் போராட்டம் ஒன்று கூடலாகியது

(யாழ்ப்பாணம்)

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் கவனயீர்ப்புப் போராட்டம் நீதிமன்றத் தடையுத்தரவு காரணமாக ஒன்று கூடலாக மாற்றப்பட்டு நடைபெற்றுள்ளது.

யாழ்.மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் சம்பந்தமாக அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் நோக்கில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் தென்னிலங்கை மீனவர்களைத் திரட்டி நேற்று யாழ். அழைத்து வந்திருந்தனர்.

எனினும் தென்னிலங்கை மீனவர்களின் போராட்டம் காரணமாக கலவரம் ஏற்படும் சாத்தியம் இருப்பது குறித்து யாழ். பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டை அடுத்து கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்துவதற்கு யாழ்.பொலிஸார் யாழ்.நீதவான் நீதிமன்றத்தின் தடையுத்தரவைப் பெற்றிருந்த நிலையில் கவனயீர்ப்புப் போராட்டம் தடுக்கப்பட்ட நிலையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் போராட்டத்தை மாற்றி ஒன்று கூடலாக நடத்த தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் முடிவு செய்து நடத்தியுள்ளது.


## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.
(C/3395)

### ஆட்டோ விற்பனைக்கு

பேக்கரி தேவைக்கு (நடமாடும் சேவைக்குரிய பொடி வேலையுடன்) பயன்படுத்தக்கூடிய SP AAD XXXX தொடரிலக்கமுடைய ஆட்டோ விற்பனைக்குண்டு. (R/358)

தொடர்புக்கு: 0717337287


# ஆடிப்பிறப்பு கொண்டாட்டம்

(வவுனியா)

வட மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் அனுசரனையுடன் வவுனியா பிரதேச கலை ஆர்வலர்களின் பங்களிப்பும் வவுனியா பிரதேச செயலகம் நடாத்தும் ஆடிப்பிறப்புக் கொண்டாட்டமும் நாளை வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மண்டபத்தில் வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்விற்கு வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் என்.கே. பந்துல ஹரிச்சந்திரபிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். இந் நிகழ்விற்கான வரவேற்புரையினை வவுனியா மாவட்ட உதவிப் பிரதேச செயலாளர் திருமதி சாரதாஅஞ்சலி கர்ணன் நிகழ்த்த நன்றியுரையினை வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ. நித்தியானந்தன் நிகழ்த்தவுள்ளார்.

இந் நிகழ்வில் கலாநிதி அகளங்கனின் சிறப்புரையும் மற்றும் கவிதை, பேச்சு போன்ற நிகழ்வுகளும் இடம்பெறும். (70)


# ஜயோதா

## உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1074 | திகதி 14.07.2014

வெற்றி எண்கள்: 04 31 45 61 | ஆங்கில எழுத்து: C

ஜக்பொட் பரிசு ரூ. 3,35,17,580/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 3,35,17,580/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 5 | 50,000/= | ரூ. 2,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 274 | 1,000/= | ரூ. 2,74,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 493 | 1,000/= | ரூ. 4,93,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11842 | 60/= | ரூ. 7,10,520/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6263 | 40/= | ரூ. 2,50,520/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 155338 | 20/= | ரூ 31,06,760/= |
| ஆங்கில எழுத்து | 22570 | 20/= | ரூ. 4,51,400/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.65,36,200/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 33,821,520/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.07.17 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3733)


### அடுத்த அமர்வு ஆகஸ்ட் 5 இல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையின் 13 ஆவது அமர்வு ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை அவையின் 12 ஆவது அமர்வு அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெற்றது.

அமர்வின் இறுதியில் எதிர்வரும் ஆகஸ்ட் 5 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு சபை ஒத்திவைக்கப்பட்டது. (இ)

### மாடுகளுக்கு இலக்கத்தகடு

கரணவாய்ப் பகுதியில் உள்ள மாடுகளுக்கு இன்று இலக்கத்தகடு வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வு சித்தமபாதி காளி கோவிலடியில் காலை 9.00 மணி தொடக்கம் நண்பகல் 1.00 மணி வரையும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(18)


# VACANCIES

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

### FACULTY OF MANAGEMENT STUDIES AND COMMERCE

University of jaffna will entertain applications upto 15.08.2014 from suitably qualified persons for the post of Assistant **Network Manager Grade II.**

**Note :** Preference will be given those who have obtained diploma or any qualification in management discipline along with the qualification required for the post of Assistant Network Manager Gr.II in terms of scheme of recruitment.

| POST | SALARY SCALE |
|---|---|
| Assistant Network Manager Grade II | Rs.26, 665-3x645-28,600 (EB)-29,245-13x645-37,360 p.m. |

In addition to the above salary, the allowances approved by University Grants Commission will also be paid.

Applications for the above post shall be sent to the Deputy Registrar/Academic Establishments, Univerrsity of Jaffna, Thirunelvely, Jaffna.

Application forms and other details may be obtained from the office of the deputy Registrar / Academic Establishments, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of Rs100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a money Order/postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self -addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a money Order/postal Order for Rs.100/- to the application form drawn in favour of the Bursar, University of Jaffna.

Applicants from the University System/Government Departments / Corporations and statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR,**
**University of Jaffna.**
**Sri Lanka.**
**14.07.2014.**

(C/3743)

# ஐ.ஓ.எம்.நிறுவனத்தால் கிளாலி இறங்குதுறை புனரமைப்பு



(யாழ்ப்பாணம்)

பளை பிரதேசத்திற்குட்பட்ட கிளாலி இறங்குதுறை 85 இலட்சம் ரூபா செலவில் ஐ.ஓ.எம்.நிறுவனத்தினால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருகிறது.

இப்பகுதியில் மீனவர்கள் தொழில் செய்வதற்கு ஏதுவாகவே 300 மீற்றர் நீளமான பிரதேசம் குறித்த நிறுவனத்தால் புனரமைக்கப்பட்டுவருகிறது.

கிளாலி பகுதியில் 2010 ஆம் ஆண்டு மீள்குடியமர்த்தப்பட்ட மீனவர்கள் இறங்குதுறை உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்திருந்ததால் தமது தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இந்நிலையில் இவ்விடயம் குறித்து பாதிக்கப்பட்ட மீனவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதையடுத்து உயர்பாதுகாப்பு வலயம் நீக்கப்பட்டு மீனவர் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

மேலும் யுத்த அனர்த்தங்களினால் இவ் இறங்குதுறை சேதமடைந்திருந்ததால் மீனவர்கள் அதைப் பயன்படுத்த முடியாத நிலையில் கிளாலி கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசம் இறங்குதுறையின் நிலைமை குறித்து கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியதுடன் இதனை புனரமைத்து தருமாறும் கோரியிருந்தது.

இதனையடுத்து அதிகாரிகள் எடுத்த நடவடிக்கையின் பயனாக குறித்த நிறுவனத்தால் இறங்குதுறை புனரமைக்கப்பட்டு வருகிறது.

# மண்டைதீவில் அமைக்கப்பட்டுள்ள வைத்தியசாலை திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பிரதேச வைத்தியசாலை திறப்பு விழா நாளை முற்பகல் 11 மணிக்கு நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சுகாதார வைத்தியத்துறை அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர்களான மாவை சேனாதிராஜா, சுரேஸ்பிரேமச்சந்திரன், சி.சிறிதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, வடமாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், இ.அனோல்ட், வேலணைப் பிரதேச சபை தவிசாளர் சி.சிவராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# வாலையம்மனுக்கு மகா கும்பாபிஷேகம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கல்வயல் அருள்மிகு வாலையம்மன் கோவில் மகா கும்பாபிஷேகம் இன்று இடம்பெறுகின்றது.

நேற்றுமுன்தினம் கும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பமானதுடன் நேற்று எண்ணைக் காப்பும் இடம்பெற்றது.

இன்று காலை 6 மணி முதல் 7 மணிவரையுள்ள சுபநேரத்தில் வாலையம்மனுக்கு மஹா கும்பாபிஷேகம் இடம்பெறுகின்றது.

ஆலய தர்மகர்த்தா ஆ.சொக்கலிங்கம் தலைமையில் இந்து சமய குருமார்கள் பலரும் இக்கும்பாபிஷேகத்தை நடாத்திவைக்கின்றனர்.

கட்டடக் கலைஞர் பரமசாமி மகேஸ்வரன் குழுவினரால் இவ்வாலயம் அழகுற அமைக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

# பாப்பரசரின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் நாடக ஆற்றுகை



(யாழ்ப்பாணம்)

யாழ்.திருமறைக்கலாமன்றத்தின் எற்பாட்டில் புனித பாப்பரசர் இரண்டாம் அருள் சின்னப்பரின் வாழ்க்கை வரலாற்றினை சித்தரிக்கும் வகையிலான நாடக ஆற்றுகை நேற்றுமுன்தினம் திருமறைக்கலாமன்றக் கலையரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு இலங்கைக்கான வத்திக்கான் நாட்டின் பிரதி நிதித்தூதுவர் றூள் சோ மற்றும் யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து நாடக ஆற்றுகை நிகழ்வினை ஆரம்பித்து வைத்தனர்.

இந்த ஆற்றுகை நிகழ்வு யாழ். மறைக்கல்வி கற்பிக்கும் அருட்சகோதரர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டு அரங்கேற்றப்பட்டது. இதில் பங்குதந்தையினர், அருட்சகோதரிகள், மற்றும் பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (48)

# "நான் ஆர் எண்டு தெரியுமோ? மாகாணசபை உறுப்பினர் எண்டதை மனசிலை வைச்சிரும்..."






வடக்கில இருக்கிற கூட்டுறவுச் சங்கங்களைப் போட்டுப் பாடாய் படுத்திறதுக்கெண்டு ஒரு ஆள் வடமாகாண— சபையில இருந்து உதிச்சிருக்காம். உங்களுக்குத் தெரியுமோ எண்டு கேட்டார் சண்முகலிங்கம் அண்ணை.

நானும் இதைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தன். ஆளைத் தெரியாதெண்டாலும் பேர் தெரியும். மாகாணசபை உறுப்பினர் சயந்தன் எண்டவர்தான் அந்தப் புதிசா முளைச்ச கொம்பு எண்டு சொல்லிச்சினம்.

ஆள் சும்மா இருக்காதாம். எப்ப பார்த்தாலும் ஒவ்வொரு கோப்பிறட்டிக்காரருக்கும் போன் எடுத்து அலுப்புக் குடுத்துக்கொண்டேயிருக்குமாம்.

தான்தான் முதலமைச்சற்றை சட்ட ஆலோசகர். தனக்குக் கீழதான் கூட்டுறவுச்சங்கங்கள் இருக்கு. தான் நினைச்சால் எதையும் செய்வன் எண்டு சொல்லிக் கொண்டு கம்பியை விட்டுக் குடைஞ்சு கொண்டேயிருக்கிறாராம்.

தன்ரை பேச்சைக் கேட்கயில்லை எண்டால் வீணாகக் கரைச்சல் படவேண்டிவரும். பிறகு தன்னைக் கோவிக்க வேண்டாம் எண்டு மிரட்டல் வேற விடுகிறார்.

சண்முகலிங்கம் அண்ணையும் நானும் கோப்பிறட்டியில நாப்பது வருசமாக வேலை செய்த ஆக்கள்.

எங்கட சேவைக்காலத்தில எத்தினையோ பொதுமுகாமையாளர்களையும் தலைவர்களையும் பணிப்பாளர் சபையையும் கண்டு களிச்சனாங்கள்.

அதைப்போல சீடிஓக்கள் [கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்] ஏஸிஸீடிக்கள் [கூட்டுறவு உதவி ஆணையாளர்கள்] எண்டு கனபேரைக் கண்டனாங்கள்.

இடையில இயக்கங்களின்ரை காலத்திலயும் கன பொறுப்பாளர்மாரோட மல்லுக்கட்டினனாங்கள். பிறகு புலிகளின்ரை காலத்தில கூட்டுறவுக்கெண்டு தனியாகப் பொறுப்பாளர் வந்து அவை போட்ட சட்டத்துக்கெல்லாம் தோப்புக்கரணம் போட்டுச் சமாளிச்சனாங்கள்.

இப்பிடியெல்லாம் பல தலைகளைக் கண்டு அதுகளோட மோதின எங்களுக்கு இந்தக் கதையைக் கேட்கச் சிரிப்புத்தான் வந்திது.

என்ன செய்யிறது, இப்ப நாங்கள் கோப்பிறட்டிக்குள்ள இல்லை. அப்பிடி இருந்திருந்தால் மச்சானுக்கு நல்ல பாடம் படிப்பிச்சிருப்பம்.

சரி, ஆர் இந்தச் சயந்தன் எண்டு தேடிப்பாத்தால்....

இவர் ஒரு பெரிய கில்லாடி எண்டு தெரிஞ்சிது.

ஆளோட ஒரு கும்பல் திரியுது. கிட்டடியில இவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில அட்டகாசம் பண்ணியதில ஒரு பெடியன்ரை உயிர் போட்டுதாம்.

ஆனால், ஆளுக்கு அரசியல் செல்வாக்குகளும் இவர் ஒரு சட்டவாளர் எண்ட பேரும் இருக்கிறதால ஒரு வலையிலயும் சிக்காமல் தப்பிக்கொண்டிருக்கிறார்.

எப்ப பார்த்தாலும் ஒரு 'காங்' இவரோட திரியும்.

மெல்ல மெல்ல ஒரு தாதாவைப்போல அரசியல்ல உருவாகி வாறார் இந்தக் குட்டிச் சிங்கம் எண்டு ஊருக்குள்ள கதை எழும்பியிருக்கு.

அந்தத் தாதா விளையாட்டுக்குத்தான் இந்தக் 'காங்'.

இந்தத் தாதா விளையாட்டிலதான் கூட்டுறவுச்சங்கக்காரரை எல்லாம் இவர் வெருட்டிக் கொண்டிருக்கிறார்.

இரவு பத்துப் பன்னிரெண்டு மணிக்கெல்லாம் போன் எடுத்து ஆள் சத்தம் போடுகிறாராம்.

தம்பி, நானிப்ப சங்கத்தில இருந்திருந்தால் இவருக்கு நல்ல பாடம் படிப்பிச்சிருப்பன் எண்டு கொதிக்கிறார் சண்முகலிங்கம் அண்ணை.

போர் நடந்த காலத்தில சங்கத்துக்கு வந்த சாமான்களில பாதியை எடுக்க வந்த இயக்கப்பெடியளிட்ட நாலு கேள்வி கேட்டு மடக்கி வந்தவங்களையே மன்னிப்புக் கேட்க வைச்சவர் சண்முகலிங்கம் அண்ணை.

அப்பிடித் துவக்குக்கே பயப்பிடாத சிங்கம். இயக்கத்துக்கே சவால் விட்ட ஆள்.

இப்ப சண்முகலிங்கம் அண்ணையைப் போலதான் நாலு பேர் தேவை.

அப்பிடி நாலுபேர் நாலு கேள்வியைக் கேட்டாத்தான் இவங்கள் திருந்துவாங்கள் எண்டு ஜெகதீபனும் சொல்லிறான்.

ஜெகதீபன் அண்டைக்கு சயந்தனோட ஒரு இடத்தில முட்டுப்பட்டானாம்.

'நெருக்கடிக்காலத்தில எல்லாம் சங்கத்தை வளக்கிறதுக்கு நாங்கள் பட்ட பாட்டை நீர் அறிஞ்சனீரோ' எண்டு ஜெகதீபன் கேட்க,

'நீர் ஒரு சங்கத்தின்ரை பணியாளர். நான் ஆர் எண்டு தெரியுமோ? மாகாணசபை உறுப்பினர் எண்டதை மனசிலை வைச்சிரும்' எண்டு சயந்தன் முறைச்சாராம்.

மாகாணசபை உறுப்பினர் எண்டால், முதல்ல அதுக்கான வேலையைச் செய்யும். சங்கங்களுக்கு தேவையான உதவிகளை முதல்ல செய்யுங்கோ. ரண்டு வருசம் போக நீங்கள் கேட்காமலே பணியாளர்களும் தலைவர்களும் உங்களை மதிப்பாங்கள். அதுக்கு முந்தி மல்லுக்கட்ட நினைக்காதையுங்கோ' எண்டு ஜெகதீபன் பதில் சொல்லியிருக்கிறான்.

'உம்மைப் பார்த்துக்கொள்ளிறம்' எண்டு சயந்தன்ரை அடியாள் ஒருதன் நெஞ்சை நிமித்தினாராம்.

இதுக்குள்ள ஓடோடெண்டு ஓடிப்போய் சயந்தன்ரை காலில விழுகிற ஆக்களும் இருக்கினம். எல்லாம் பயக்கெடுதிதான்.

இப்பிடி இருக்கு மாகாணசபை உறுப்பினர்களின் மக்கள் பணியும் கூட்டுறவுச் சங்கங்களின் நிகழ்காலமும்.

இல்லத்தில் இணக்கமுடன் வாழ்ந்தால், அது தாய்நாட்டில் சட்டத்தை மதிக்கத் தூண்டும். - சீனப் பழமொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## தீர்வுக்கு வழியைச் சொல்லுங்கள்!

நமக்கு வயிற்றுவலி என்றால் என்ன செய்வோம். முதலில் நமக்குத் தெரிந்த கைமருந்துப் பொருட்களான உள்ளி, இஞ்சி, வெந்தயம், மல்லி, வேர்க்கொம்பு என்று எதையாவது சுட்டோ அரைத்தோ அவித்துக் குடிநீராக்கியோ உட்கொண்டு பார்ப்போம்.

ஒன்றுக்கும் வலி நிற்கவில்லை என்றால் மருத்துவரிடம் போவோம். மருத்துவர் நமக்கு வரும் நோய்களைத் தீர்ப்பதற்கு உதவுபவர்; அதற்கான தகுதிகளைக் கொண்டிருப்பவர்; நோய்களைக் குணமாக்கும் அந்த சேவைக்கென்றே இருப்பவர் என்று நம்பிக்கை வைத்துத்தான் போகிறோம்.

அவரிடம் போய் நமக்கு இந்த இந்த இடத்தில் வலி இருக்கிறது; இன்னின்ன மாதிரி அது உடம்பை வருத்துகிறது என்று சொல்லிவிட்டு, நமது நோய் மாறுவதற்கு வலி தீருவதற்கு அவர் தரப்போகும் தீர்வை எதிர்பார்த்துக் காத்துநிற்கிறோம்.

அவரோ தீர்வும் சொல்லாமல், மருந்தும் சொல்லாமல், நோயிலிருந்து மீள்வதற்கு வழியும் சொல்லாமல், "உமக்கு வயிற்றில் வலி இருக்கிறது, கையிலும் பெரிய நோவொன்றிருக்கிறது, முதுகுப்பக்கமாகவும் விட்டு விட்டு வலிக்கிறது, தொண்டையிலும் கடுமையாக நோகிறது..." என்பதையே அவரும் சொல்லிக் கொண்டிருந்தால் எப்படி இருக்கும்?

"டொக்டர் அதெல்லாம் எனக்கிருக்கும் வலிகள் தானே... அந்த நோவெல்லாம் இருக்கிறது எனக்கு நல்லாத் தெரிகிறது டொக்டர்... அது தீர்வதற்கு என்ன வழி என்று சொல்லுங்கள்... எனக்கிருக்கும் அந்த வலிகள் குணமாக மருந்தென்னவென்று சொல்லுங்கள்... அதற்குத்தான் டொக்டர் உங்களிடம் வந்தேன்..." என்று கத்துவோமா இல்லையா?

அதுபோலத்தான் –

நமது வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கும் அரசியலுரிமைப் பிரச்சினைகளுக்கும் நல்லபடியாகத் தீர்வு காண்பார்கள் என்று நம்பித்தான், வாக்குகளைப் போட்டு, மக்கள் ஆணை என்னும் அதிகாரத்தைக் கொடுத்து நம் பிரதிநிதிகளை மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்கும் என அனுப்பி வைக்கிறோம்.

நமது பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள், அதற்குரிய வழிகளைச் சொல்வார்கள் என்று எதிர்பார்த்து, நமக்கு இன்னின்ன பிரச்சினைகள் இருக்கின்றன விரைந்து தீர்வைக் காணுங்கள், தொடரும் நமது வாழ்வுக் கஷ்டங்களைத் தீருங்கள் என்று சொல்லி அவர்களை நம்பிக்கையோடு பார்த்து நிற்கிறோம்.

அவர்களோ, "எமது மக்களுக்கு வீடில்லை, வேலைவாய்ப்பில்லை, விவசாயம் செய்ய முடியவில்லை, கடற்தொழிலுக்கு கஷ்டப்படுகிறார்கள், அவர்கள் காணிகளில் மீள்குடியேற முடியவில்லை, படை முகாம்களுக்கு காணிகளை எடுக்கிறார்கள், மாகாணசபையில் ஒன்றும் செய்ய இயலவில்லை, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு இன்னும் இல்லை..." என்று நமக்குத் தெரிந்த பிரச்சினைகளையே நம்மிடம் திருப்பி வீராவேசமாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

ஐயன்மீர்! இதெல்லாம் உள்ளது நன்கு தெரிகிறது. இவற்றைத் தீர்ப்பதற்கு இந்த ஐந்து வருடங்களில் என்ன துரும்பை எடுத்துப் போட்டிருக்கிறீர்கள்? அரசியல் தீர்வொன்றைக் கண்டுவிட்டால் ஏனைய பெரும்பாலான நமது பிரச்சினைகளும் தீர்ந்துவிடும்.

தீர்வைக் கொண்டுவர என்ன உபாயம் ஐயா வைத்துள்ளீர்கள்? நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கும் சர்வதேச அழுத்தத்தால் என்ன மாதிரி எந்தப் பக்கமாகப் பிதுங்கி நமக்கான அரசியல் தீர்வு வெளியே வரும் என்று விளங்கப்படுத்த மாட்டீர்களா?

நமது பிரச்சினைகளை நமக்கே கிளிப்பிள்ளை போல திருப்பிச் சொல்லி நம்மை ஆவேசமூட்டி விளையாடிக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு, அவை தீர வழியைச் சொல்லுங்கள் தலைவர்களே!

- ஆசிரியர்.

# காணிப்பிரச்சினைகளை தீர்க்க சுமுகமாக சிந்திக்க வேண்டும்

### - கிழக்கு மாகாணசபை உறுப்பினர் தெரிவிப்பு -

காணிப்பிரச்சினைகளை சுமுகமாக தீர்க்கவே சிந்திக்க வேண்டும் என கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ரம்ழான் அன்வர் தெரிவித்துள்ளார். திருகோணமலை மூதூர் தோப்பூர் - நாவற்கேணிக்காடு பிரதேசத்தில் வசிக்கும் மக்களை அடுத்த மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் தமது குடும்பத்தினரோடு வெளியேறுமாறு சேருவில பிரதேச செயலாளரினால் அக்கிராமத்தில் வசிக்கும் பலருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் சேருவில பிரதேச செயலர், கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ரம்ழான் அன்வர் மற்றும் பொது மக்களுக்குமிடையிலான சந்திப்பொன்று பௌத்த விகாரை அமைக்கப்பட்டு வருகின்ற இடத்தில் இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தக் காணிப் பிரச்சினையை நாம் சுமுகமாக தீர்க்கவே சிந்திக்க வேண்டும். நாட்டில் இடம்பெற்று வருகின்ற அசம்பாவிதங்களை இதற்கு ஆதாரமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

எங்களது முஸ்லிம் மக்கள் தோப்பூர்-நாவற்கேணிக்காடு பிரதேசத்தில் இன்று நேற்று குடியேறியவர்கள் அல்லர். பல தசாப்தங்களுக்கு முன்னரே குடியேறி தமது இருப்பிடங்களை அமைத்து வாழ்க்கையை கொண்டு செல்கின்றனர்.

அவர்களுக்கு காணி ஆதாரங்கள் இருக்கின்றன. வீட்டுக்கான மின்சார கட்டண துண்டு இருக்கின்றது. வயல் செய்தமைக்கான போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன. இவைகள் எங்களது ஆதாரங்களாக இருக்கும் போது பிரச்சினையை சுமுகமாக தீர்க்க முன்வருவேன். அல்லது நீதிமன்றம் சென்றேனும் தோப்பூர்-நாவற்கேணிக்காடு மக்களுக்கு காணியை பெற்றுக் கொடுக்க போராடுவேன் என்றார்.

இந்தக் கூட்டத்தில் தோப்பூர் ஜம்யதுல் உலமா சபை தலைவர் மூமீன் ஜரீத், சேருவில் பிரதேச சபை உறுப்பினர் எம்.எல். பைசர், மூதூர் பிரதேச சபை உறுப்பினர் ஏ.ஜீ.நிஸ்மி போன்றோரும் கலந்து கொண்டனர்.

# சிங்களவர் - முஸ்லிம்கள் இடையே எந்தவித பிரச்சினைகளும் இல்லை

### – ஜே.வி.பி. தலைவர் தெரிவிப்பு –

(கொழும்பு)

சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இந்நாட்டில் எந்த விதமான பிரச்சினைகளும் கிடையாது. என்று ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

இரத்தினபுரி மாநகர சபையில் இடம்பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாட்டின் உண்மை நிலையை பொதுமக்கள் அறிந்திடாத வண்ணம் மக்களை திசைதிருப்பும் நோக்கத்துடன் இந்த இன வன்செயல்கள் தூண்டிவிடப்படுகின்றன.

சிங்கள மக்களுக்கு முஸ்லிம் மக்களையோ, தமிழ் மக்களையோ தாக்க வேண்டும் என்ற எண்ணமில்லை.

அவர்கள் தமிழ், முஸ்லிம் மக்களுடன் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்ற எண்ணமே உள்ளது. ஆனால் அவர்களின் மனங்களை திசை திருப்பும் வகையில் நாட்டில் இன வன்செயல்கள் ஏற்படுத்தப்படுகின்றன. பேருவளை, அளுத்கம, பகுதியில் தேவையற்ற இன வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது.

1980, 1983ஆம் ஆண்டுகளில் தமிழர்களுக்கெதிராக இன வன்செயல்கள் இடம்பெற்றன. இதற்குக் காரணம் தமிழ் - சிங்கள மக்களிடையே ஏற்பட்ட குரோதமில்லை. அப்போதைய ஐ.தே.க. அரசாங்கம் உண்மை நிலையை மக்கள் அறிந்திடாத வண்ணம் அவர்களை திசை திருப்பும் வகையில் வன்செயலை தூண்டிவிட்டது என்றார்.

# அகதிகளிடம் செய்மதி தொலைபேசிகள் விசாரணைகளை ஆரம்பித்தது ஆஸி

அகதிக் கோரிக்கையாளர்களிடம் செய்மதித் தொலைபேசிகள் காணப்பட்டமை குறித்து அவுஸ்ரேலியா விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அண்மையில் அவுஸ்ரேலிய கடற்பரப்பை படகு மூலம் சென்றடைந்த 153 அகதிக் கோரிக்கையாளர்களிடம் செய்மதித் தொலைபேசிகள் காணப்பட்டன.

இது தொடர்பில் அவுஸ்ரேலிய அரசாங்கம் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அகதிக் கோரிக்கையாளர்கள் சட்டத்தரணிகளுடன் செய்மதி தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டுள்ளனர்.

அகதிக் கோரிக்கையாளர்களுக்கு எவ்வாறு சட்டத்தரணிகளின் இலக்கங்கள் கிடைக்கப் பெற்றன என்பது குறித்தும் விசாரணை செய்யப்பட உள்ளது.

இந்தத்தொலைபேசி உரையாடல்களை அவுஸ்ரேலிய புலனாய்வுப் பிரிவினர் பதிவு செய்துள்ளனர். அகதிக் கோரிக்கையாளர்களின் இந்தப் பயணம் திட்டமிட்ட அடிப்படையிலான சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கை என அவுஸ்ரேலிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சட்டவிரோத ஆட்கடத்தல் வர்த்தகம் குறித்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாக குறிப்பிட்ட போது தம்மை விமர்சனம் செய்ததாகவும், தற்போது அதனை ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அவுஸ்ரேலியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் திசர சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அகதிக் கோரிக்கையாளர்கள் நவ்ரு தீவுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

# அவசரஅழைப்பு இலக்கத்திற்கு நாளாந்தம் 7000 அழைப்புக்கள்

### — 30வீதம் போலியானவை —

அவசர அழைப்பு தொலைபேசி இலக்கமான 119 என்ற இலக்கத்திற்கு நாளாந்தம் 7,000 தொலைபேசி அழைப்புக்கள் கிடைக்கின்றன.

இந்த அழைப்புக்களில் 30 வீதமானவை போலியானவை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சிறியளவிலான குடும்பப் பிரச்சினைகள், வாக்குவாதம் என்பன தொடர்பிலும், இந்த இலக்கத்திற்கு தொடர்புகொண்டு முறைப்பாடு செய்யப்படுகின்றது.

குற்றச் செயல்கள், அனர்த்தம் மற்றும் அபாயம போன்ற அவசர நிலைமைகளின் போது, தகவல் தெரிவிப்பதற்காகவே இந்த இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது,

இந்த இலக்கத்திற்கு போலியான அழைப்புக்களை ஏற்படுத்தும் நபர்களுக்கு எதிராக, கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும சுட்டிக்காட்டினார

## 63 மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோயின் மீட்பு

மெதிவல பகுதியில் 63 மில்லியன் ரூபா பெறுமதியான 9 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், இவை மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# என் நண்பர் ஆத்மாநாம்

ஸ்டெல்லா புரூஸ்



**ஆத்மாநாம் கதவை நோக்கி பாய்ந்தோடி வந்தார். ஒருக்களித்து நின்று அவரின் வலது காலை உயர்த்தி வலைக்கதவை உத்வேகத்துடன் எட்டி உதைத்தார். காவலாளியிடம் கத்தினார். "சீக்கிரமா கதவைத் திறய்யா... திற கதவை..." என்னைப் பார்த்துவிட்ட பரவசத்தில் கைகளாலும் கம்பிவலையைப் பிடித்து குலுக்கினார். அவருடைய உணர்வு மேலீடுகளைப் பார்த்து காவலாளி கதவைத் திறக்க யோசித்தார். "திறய்யா.. சீக்கிரம் திற..." ஆத்மாநாம் காவலாளியை அவசரப் படுத்தினார்... அமைதியான நிதானமான சிறிது சங்கோஜமான ஆத்மாநாமின் சிதைந்து போயிருந்த தோற்றத்தை ஏற்கனவே கதிகலங்கி விட்டிருந்த என் மனம் தாங்கிக்கொள்ளும் சக்தியை இழந்திருந்ததால், எனக்கு கட்டுப்படுத்த முடியாத அழுகை வெடித்து விட்டது. கம்பி வலைக்கு அப்பால் இருந்து அதே பரவசத்துடன் அவர் சப்தமான குரலில் எனக்கு ஆறுதல் சொன்னார். "அழாதீங்க... எனக்கு ஒண்ணும் ஆகலை. சீக்கிரமா சரியாயிடும்."**

**1979 ஆம்** வருஷத்தின் இறுதி மாதங்களில் ஆத்மாநாம் கடும் மனச்சிதைவுக்கு ஆளாகி சிகிச்சைக்காக மனநல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டியதாயிற்று.

சமாதானப் படுத்திக் கொள்ளவே முடியாத துர்ப்பாக்கியமான சம்பவங்கள் அவை.

மனநல மருத்துவ நிபுணரிடம் ஆத்மாநாமை அவரின் குடும்பத்தினர் அழைத்துப் போனார்கள்.

விபத்து நடந்த ஸ்தலத்தைப் பார்த்தாலே அதிரும் என் மனத்தன்மை ஆத்மாநாமைப் போய் பார்க்கப் பயந்தது. தயங்கியது. ஆயினும் நான் போய்த்தான் ஆக வேண்டும். பார்த்துத்தான் ஆக வேண்டும். நான் தனியாகத்தான் கிளம்பினேன்.

புரசைவாக்கத்தில் இறங்கி அந்த தனியார் மருத்துவமனையை கேட்டு விசாரித்தபடி மிகமிக மெதுவாக நடந்தேன். மருத்துவமனையின் முதல் மாடியில் ஆத்மாநாம் இருந்தார். குறுகலான படிக்கட்டுகளில் ஏறி முதல் மாடியை அடைந்தேன் - நேராக நீண்ட வராந்தா இருந்தது. அதில் வரிசையாக அறைகள்.

கடைசி அறையின் வெளியில் வராந்தா,கம்பி வலைகளால் மறைக்கப்பட்டிருந்தது. அதேபோல் முதல் அறை ஆரம்பிக்கும் இடத்திலும் கம்பி வலையின் அகலமான மறைப்பு இருந்தது. அதன் மையத்தில் சிறிய கதவு சாத்தப்பட்டு பூட்டு தொங்கியது. அதன் அருகில் ஒரு காவலாளி அமர்ந்திருந்தார்.

இரண்டாவது அறையின் முன் வராந்தாவில் ஆத்மாநாம் ஒரு ஈஸி சேரில் சாய்ந்தபடி உட்கார்ந்திருந்தார். வராந்தாவின் எதிர்புறம் பார்க்கும்படியாக வானவெளி தெரிந்தது. ஆனால் ஏறி குதித்து விடாதபடி அங்கும் கம்பி வலைகள் பொருத்தப்பட்டிருந்தன.

நான் தூரத்தில் நின்றவாறு சில வினாடிகள் ஆத்மாநாமைப் பார்த்தபடி இருந்தேன். என் மனம் உள்ளுக்குள் கேவி தத்தளித்தது.

காவலாளியிடம் ஆத்மாநாமின் பெயரைச் சொன்னேன். உடனே அவர் எழுந்து நின்று பூட்டைத் திறக்க தயாரானார். அந்தச் சின்ன சப்தத்தில் திரும்பிய ஆத்மாநாம் ஈஸிசேரில் இருந்து பளீரென எழுந்து நின்றார்.

அவர் நின்ற இடத்தில் இருந்து வலைக்கதவு பன்னிரெண்டு அடி தூரத்தில் இருந்ததாகச் சொல்லலாம். ஆத்மாநாம் கதவை நோக்கி பாய்ந்தோடி வந்தார். ஒருக்களித்து நின்று அவரின் வலது காலை நான்கு அடி உயரத்துக்கும் மேலாகி உயர்த்தி வலைக்கதவை உத்வேகத்துடன் எட்டி உதைத்தார். அவர் உதைத்த வேகத்தில் அகலமான அந்தப் பெரிய வலைப் பகுதியே ஆடி அதிர்ந்தது.

ஆத்மாநாம் காவலாளியிடம் கத்தினார். "சீக்கிரமா கதவைத் திறய்யா... நான் அன்னிக்கே உன்கிட்டே சொல்லியிருக்கேனே... விருதுநகர்ல இருந்து என் ப்ரண்ட் வருவார். கதவைத் திறந்து வைன்னு... இவர்தான் அது. திற கதவை..." என்னைப் பார்த்துவிட்ட பரவசத்தில் கைகளாலும் கம்பி வலையைப் பிடித்துக் குலுக்கினார்.

அவருடைய உணர்வு மேலீடுகளைப் பார்த்து காவலாளி கதவைத் திறக்க யோசித்தார். "திறய்யா.. சீக்கிரம் திற..." ஆத்மாநாம் காவலாளியை அவசரப் படுத்தினார்... அமைதியான நிதானமான சிறிது சங்கோஜமான ஆத்மாநாமின் சிதைந்து போயிருந்த தோற்றத்தை ஏற்கனவே கதிகலங்கி விட்டிருந்த என் மனம் தாங்கிக்கொள்ளும் சக்தியை இழந்திருந்ததால் எனக்கு கட்டுப்படுத்த முடியாத அழுகை வெடித்துவிட்டது. கம்பி வலைக்கு அப்பால் இருந்து அதே பரவசத்துடன் சப்தமான குரலில் எனக்கு ஆறுதல் சொன்னார். "அழாதீங்க... எனக்கு ஒண்ணும் ஆகலை. சீக்கிரமா சரியாயிடும்."

1979இன் இறுதியில் அவரிடம் தோன்றிய மனச்சிதைவின் முதல் தாக்குதல் மீண்டும் மீண்டும் ஆத்மாநாம் வாழ்க்கையில் கொடிய நிழலாய் நச்சு அரவமாய் படமெடுத்தபடி தொடர்ந்துகொண்டே இருந்தது.

அந்த விஷத் தீண்டலில் இருந்து மனநல மருத்துவத்தால் அவரை மீட்டெடுக்க முடியவில்லை. ஆத்மாநாம் வாழ்க்கை கிணற்றில் குதித்து மூழ்கியதில் முடிவு பெற்றது.

இறந்து இருபது வருடங்களுக்கு மேலாகி விட்டன. என் ஞாபகப் பதிவுகளில் பெயர்த்துப் போடவே முடியாதவாறு உறைந்து கிடக்கிறார். அவர் மேலும் மேலும் கூட இழப்புகள் வந்தன. அதே போல் புதிய புதிய உறவுகளும் கைகோர்த்தன. வாழ்க்கை மட்டும் யாருக்காகவும் எதற்காகவும் தேக்க முறாமல் ஆரம்பமும் முடிவும் இல்லாத பிரவாகமாய் புரண் டோடிக் கொண்டிருக்கிறது.

கேட்கின்ற சில சில இசைகள் ஆத்மாநாமை ஞாபகப்படுத்தும். எனக்கும் அவருக்கும் இடையில் இருந்த உறவில் இசை ரசனை மிக அழுத்தமான் தளமாக இருந்ததை மறக்கவே முடியாது. நானும் ஆத்மாநாமும் இலக்கிய கூட்டங்களுக்குச் சென்றது மிகமிக குறைச்சல். இசை நிகழ்ச்சிக்களுக்குப் போனதுதான் அதிகம். நிஜத்தில் அவை எண்ண முடியாதவை.

அந்த மாதிரி போகின்றபோது, சில நேரங்களில் சம்பந்தப்பட்ட சங்கீத வித்வான்களைச் சந்தித்து ஒருசில நிமிடங்கள் அவர் பேசிக்கொண்டிருப்பார். இப்படி ஒருசில நிமிட சந்திப்புகளிலேயே எம்.டி ராமநாதனுடன் ஆத்மாநாமுக்கு நட்பு ஏற்பட்டிருந்தது. அவ்வப்போது ராமநாதனின் வீட்டுக்குப் போய் அவருடன் பேசிக்கொண்டிருப்பார்.

1976ஆம் வருடம் பெப்ரவரி மாதம். ஹிந்துஸ்தானி சங்கீத வித்வான் பர்வீன் சுல்தானாவின் இசை நிகழ்ச்சி சென்னையில் நடந்தது. சென்னை சங்கீத ரசிகர்களின் மத்தியில் அப்போது பர்வீன் சுல்தானா மிகவும் பிரபலமாக இருந்தார். எனக்கும் பர்வீன் சுல்தானாவின் இசைமேல் பெரும் மோகமே இருந்தது. ஒருவித போதையை தந்திருக்கிறது.

அவரின் ஆலாபனைகள். இரவில் அறை விளக்கை அணைத்துவிட்டு ப்ளேயரில் பர்வீன் சுல்தானாவின் இசைத்தட்டை ஒலிக்கவிட்டு இருளில் கிடந்த கணங்கள் ஒலியின் அரூப யாத்திரைப் பிரவாகமாய் என்னை ஏந்திச் சென்றிருக்கிறது.

பர்வீன் சுல்தானாவின் இசை நிகழ்ச்சிக்கு ஆத்மாநாமும் நானும் என் வீட்டிலிருந்து கிளம்பத் தயாரானோம். அப்போது ஒரு வாரத்திற்கு முன்பு நான் வாங்கியிருந்த பர்வீன் சுல்தானாவின் பெரிய எல்.பி. இசைத்தட்டு ஒரு அழகுப்பொருள் போல என்னுடைய மரஷெல்பில் முதன் மைப்படுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதில் பர்வீன் சுல்தானா இளமையின் வசீகரங்களோடு அழகிய நட்சத்திரமாகச் காட்சி அளித்துக்கொண்டிருந்தார்.

நிகழ்ச்சிக்கு கிளம்பிய நிமிடம் ஆத்மாநாம் சட்டென அந்தப் புதிய இசைத்தட்டையும் எடுத்து அவருடைய பெரிய ஜோல்னா பையில் வைத்துக் கொண்டார். "இது எதுக்கு?" - நான் ஆச்சர்யத்துடன் கேட்டேன். "இருக்கட்டும்.. முடிஞ்சா இதில பர்வீன் சுல்தானாவோட ஆட்டோக்ரா.ஃப் வாங்குவோம்," என்றார் ஆத்மாநாம்.

எனக்கு இந்த மாதிரி விஷயங்களில் ஆர்வம் கிடையாது. அதனால், "ஆட்டோகிரா.ஃப்பெல்லாம் வேண்டாம் மது. கூட்டத்தில எதுக்கு?.. சங்கீதத்தை கேட்டுவிட்டு வந்திட்டே இருப்போம்... "ச்சூ...சோம்பேறி... பேசாம நீங்க வாங்க... நான் அவகிட்ட ஆட்டோகிரா.ஃப் வாங்கிறேன்.."

ஆத்மாநாமின் முடிவை என்னால் மாற்ற முடியவில்லை. இம்மாதிரியான செயல்கள் அவருக்கு வாடிக்கைதான்.

நிகழ்ச்சிக்கு இருவரும் கிளம்பிச் சென்றோம்... எப்போதும்போல பர்வீன் சுல்தானாவின் நாதவெள்ளம் அதற்கே உரித்தான தாளகதிகளில் சுழித்துக்கொண்டிருந்தது.

இருபது நிமிட இடைவேளை அறிவிக்கப்பட்டது. ஆத்மாநாம் அவருடைய ஜோல்னா பையுடன் எழுந்து கொண்டார். "வாங்க பாத்திட்டு வந்திரலாம்," என்றார். எனக்கு வேறு வழி கிடையாது. எழுந்து அவருடன் போனேன்.

உள் அரங்கத்திற்குள் செல்கிற வழியை நோக்கி ஆத்மாநாம் நடந்தார். மேடைக்குச் செல்கிற வழியின் கதவின் அருகில் ஒருவர் நின்று கொண்டிருந்தார். ஆத்மாநாம் இசைத்தட்டை அவரிடம் எடுத்துக்காட்டி விஷயத்தை சொன்னார். அந்த மனிதர் உள்ளே போ[illegible] இரண்டொரு நிமிடங்கள் கழித்துத திரும்பி வந்தார். எங்களை உள்ளே போகச் சொன்னார்.

உள்ளே சிறிது தூரம் நடந்து மற்றொரு பெரிய அறைக்குள் நுழைந்தோம். பர்வீன் சுல்தானா நின்றவாறு யாருடனோ சிரித்துப் பேசிக்கொண்டி ருந்தார். எனக்கு அது மகத்தான தரிசனம்! ஒருநாள் கூட நான் கற்பனை செய்து பார்த்ததில்லை. இத்தனை அருகில் அந்த மனுஷியைப் பார்ப்பேனென்று.

சங்கீத உபாசனை அந்த மனுஷியின் தோற்றத்தில் பிரகாசமான ஒளியைப் பாய்த்திருந்தது. மனுஷியின் பார்வை எங்களை வரவேற்றது. ஆத்மாநாம் அவருக்கு நமஸ்தே சொன்னார். நான் சொல்லவில்லை. மெய்மறந்த தரிசனத்தின் ஒடுங்கிப்போன மௌனத்தில் நான்.

ஆத்மாநாம் ஜோல்னா பையில் இருந்து இசைத்தட்டை எடுத்தார். பர்வீன் சுல்தானாவிடம் ஆங்கிலத்தில் சொன்னார் : "இந்த இசைத்தட்டு இவருடையது. இதில் நீங்கள் உங்களுடைய கையெழுத்திட்டுத் தரவேண்டும்..."

உடனே பர்வீன் சுல்தானா புன்னகையுடன் எதிர்பாராத கேள்வியை ஆத்மாநாமிடம் கேட்டார்: "இசைத்தட்டு இவருடையது என்கிறீர்கள்... ஆனால் ஆட்டோக்ரா.ஃப் நீங்கள் கேட்கிறீர்களே... கேள்வியைக் கேட்டபிறகு பர்வீன் சுல்தானாவின் கண்கள் என்னை நோக்கின.

ஆத்மாநாம் ஒரு மாதிரியாக திணறிப் போனார். அந்தக் கேள்வி ஏதோ ஒரு தடங்கல் போலாகிவிட்டது அவருக்கு.

பர்வீன் சுல்தானா - அந்தச் சில விநாடிகள்தான் - கம்பீரமாகக் காத்திருந்தார் - பதிலுக்காக. வழி தவறிவிட்ட தொனியில் ஆத்மாநாம் பதில் சொன்னார் : "உங்களுடைய கையெழுத்து அவருக்கும்தான் தேவை. அவர் சார்பாக நான் கேட்கிறேன். அவ்வளவுதான்.."

"அப்படியானால் சரி. கொடுங்கள்..." பர்வீன் சுல்தானா இசைத் தட்டை வாங்கிக் கொண்டார். அவரின் அருகில் நின்றவர் உடனே பேனா கொடுத்தார். இசைத் தட்டின் பின்புறத்தில் "வித் லவ்" என எழுதி கையெழுத்திட்டார் பர்வீன்.

மீண்டும் வாய்க்கவே முடியாத அற்புத கணம் அது. மொத்த சூழலுமே மேற்கு அடிவான சூரியனாக தகதகத்தது. என்னுடைய மொத்த உணர்வுகளும் அந்த மனுஷிக்கு நன்றி சொல்லிக் கொண்டிருந்தன. மனுஷி கையெழுத்திட்டு மட்டும் தரவில்லை. 'P' என்ற எழுத்தின் மத்திய வெளியில் இரண்டு கண் மூக்கு வாய் வரைந்தார். வாயின் அமைப்பில் அந்த முகம் -அழுவது போலிருந்தது! S என்ற எழுத்தில் இருக்கும் வெளியில் அதேபோல கண்கள் வாய் மூக்கு வரைந்தார். வாயின் அமைப்பு அந்த முகம் மலரச் சிரிப்பது போலிருந்தது.

மறுபடியும் புன்னகைத்த மனுஷியிடம் இருந்து எதிர்பாராத கேள்வி என்னை நோக்கி, "இசைத்தட்டு உங்களுடையதுதானே?" "ஆம்," என்றேன்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# வெங்கிராயன் வயல்வெளியில் உவர்நீர் தடுப்பணையை அமைக்க கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கமநல நிலையத்துக்கு உட்பட்ட நாவற்காடு வெங்கிராயன் வயல் வெளியில் உவர்நீர் தடுப்பணையை அமைத்துத்தருமாறு அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த காலங்களில் சட்ட விரோதமான முறையில் மண் அகழ்வு இடம்பெற்றதால் இப்பகுதி மண்தடுப்பணைகள் அழிக்கப்பட்டுள்ளன. இதனால் இப்பகுதியூடாக வயல் பகுதிகளுக்கு உவர்நீர் வருவதால் வயல்நிலங்கள் உவராக மாறி வருகின்றன.

இதனால் நெற்செய்கை குறைவடைவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

நெற் செய்கையை நம்பி தமது வாழ்க்கையை ஓட்டும் இந்த விவசாயிகள் வயல் வெளியில் உவர்நீர் கலப்பதால் நஷ்டங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. அதுமட்டுமன்றி தமது வாழ்க்கைச் செலவுகளை ஈடுகட்ட முடியாத அளவுக்கு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து வெங்கிராயன் வயல் வெளியில் உவர்நீர் தடுப்பணையை அமைத்துத் தர வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## "வறுமையிலும் செம்மை" கண்காட்சி நிகழ்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மலையாளபுரம் இராமகிருஸ்ண வித்தியாலயத்தில் "வறுமையிலும் செம்மை" ஆக்கப்பொருட் கண்காட்சி அண்மையில் நடைபெற்றது.

"வறுமையிலும் செம்மை" என வானம் பார்க்கும் கூரையின் கீழ் நடைபெற்ற இக்கண்காட்சி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர் ஆகியோரின ஒத்துழைப்புடன் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## மேய்ச்சலுக்கு கட்டி விடப்பட்ட கால்நடைகள் திருட்டு

அச்சுவேலி, பத்தமேனி பாரதி வீதி பகுதியில் மேய்ச்சலுக்காக கட்டி விடப்பட்ட 3 கால் நடைகள் இனந்தெரியாதோரால் களவாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வழமை போன்று கால்நடைகளை உரிமையாளர் அருகிலுள்ள மேய்ச்சல் நிலத்தில கட்டி விட்டு வந்துள்ளார். மாலை நேரம் மீண்டும் சென்று பார்த்த போது அவ்விடத்தில் நின்ற கால்நடைகள் காணாமற் போயிருந்தமை தெரியவந்தது. பெறுமதி மிக்க இக்கால்நடைகள் திருட்டுப போனமையால் தனக்கு பாரிய வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதாக உரிமையாளர் கவலை தெரிவித்துள்ளார்.

எனவே இத்திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களை உரியவர்கள் கண்டறிந்து நடவடிக்கைகள் மேற்கொள்ள 'வேண்டும் என பாதிக்கப்பட்ட நபர் கோரிக்கை விடுத்துள்ளார். (85)

## வேலையற்ற உடற்கல்விபட்டதாரிகளை பதிவு செய்யுமாறு அறிவிப்பு

யாழ்.பல்கலைக்கழகத்தில் உடற்கல்வி டிப்ளோமா பட்டத்தினைப் பெற்று 2012, 2013 ஆம் ஆண்டு வெளியேறி வேலையற்றிருக்கும் டிப்ளோமா பட்டதாரிகளையும் இவ் ஆண்டுகளுக்கு முன்னதாக வெளியேறி வேலையற்று இருக்கும் டிப்ளோமா பட்டதாரிகளையும் உடனடியாக பதிவுசெய்யமாறு உடற்கல்வி டிப்ளோமா பட்டதாரிகள் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ப.தர்குமாரன் அறிவித்துள்ளார்.

## றமழான் நற்சிந்தனை

மனிதர்களே உங்களிடம் ஒரு மகத்தான மாதம் வந்திருக்கின்றது. அது பறக்கத் செய்யப்பட்ட மாதமாகும். அதில் உலவதுல் கத்ர் என்ற இரவு ஆயிரம் மாதங்களை விட சிறந்த இரவாகும். (105)



## உள்ளூராட்சி சபைகளை வலுப்படுத்தும் செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் உள்ள 34 உள்ளூராட்சி சபைகளை வலுப்படுத்தல் தொடர்பான விழிப்பூட்டல் செயற்றிட்டம் இன்று காலை 9 மணிக்கு ரில்கோ சிட்டி ஹோட்டலில் இடம் பெறவுள்ளது. வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறும்.

தேசிய அபிவிருத்திக்காக உள்ளூராட்சி சபையினை வலுப்படுத்தல் எனும் திட்டத்தில் இந்நிகழ்வு இடம்பெறும்.

மக்கள் பங்குபற்றலின் அடிப்படையில் பிரதேச நல்லாட்சி விழுமியங்களை முன்னிலைப்படுத்தும் உள்ளூராட்சி தொடர்பான தேசியகொள்கை பற்றி வடமாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்வினை பொதுநலவாய நாடுகளின் நல்லாட்சி மன்றங்களின் இணையம், இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம் ஆகியன இணைந்து நடாத்தவுள்ளன.

உள்ளூராட்சி தொடர்பான தேசியகொள்கை பிரகடனத்தில் மக்கள் பங்களிப்பின் அடிப்படையிலான பிரதேச நல்லாட்சி விழுமியம் விசேட சரத்துக்கள் தொடர்பாக ஆராயப்படும் இந்நிகழ்விற்கு வடமாகாணத்தில் உள்ள உள்ளூராட்சிமன்ற தலைவர்கள், செயலாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். (92)



# களத்திற்கு வெளியில்...

உண்மையை சொல்ல வேண்டும் என்றால் இந்தத் தருணத்தில் இந்த விருது மீது எனக்கு ஆர்வம் இல்லை. ஆர்ஜன்ரீனா தேசத்தின் மக்களுக்கு உலகக் கிண்ணத்தை வென்று சமர்ப்பிக்க வேண்டும் என்று விரும்பினோம். ஆனால் அதை செய்ய முடியவில்லை. மற்ற ஆட்டங்களை போல், இறுதி ஆட்டத்தில் எங்களுக்கு அதிர்ஷ்டம் இல்லை. நாங்கள் சிறப்பாக விளையாடி தோல்வி அடைந்ததுதான் மனதை மிகவும் பாதித்துள்ளது.

**மெஸ்சி (ஆர்ஜன்ரீனா வீரர்)**

தங்கப் பந்து விருதை பெற மெஸ்சிக்கு தகுதி இல்லை. தகுதியில்லாத அவருக்கு விருது கிடைத்துள்ளது. இது நியாயமே இல்லை. விருதை பெற மெஸ்சி விரும்பாததை நான் பார்த்தேன். உலகக் கிண்ண போட்டிகளில் 6 கோல்கள் அடித்த கொலம்பிய வீரர் ஜேம்ஸ் ரோட்ரிக்ஸுக்கு தான் தங்கப் பந்து விருதை கொடுத்திருக்க வேண்டும்.

**மரடோனா (ஆர்ஜரீனா முன்னாள் வீரர்)**

சிறந்த முறையில் போட்டியை நிறைவு செய்திருக்கிறோம். இந்த வெற்றியின் மூலம் அரையிறுதியில் கண்ட அதிர்ச்சி தோல்வியிலிருந்து ஓரளவு மீளலாம். நாங்கள் மிக அருகில் வந்து கிண்ணத்தை இழந்திருக்கிறோம். அந்த ஏமாற்றம் இன்னமும் எங்களுக்குள் இருக்கிறது. இந்த 3ஆவது இடத்துக்கு நாங்கள் தகுதியானவர்கள். எங்கள் அணியை நினைத்து பெருமை கொள்கிறேன்.

**அர்ஜென் ரொபன் (நெதர்லாந்து வீரர்)**

நடைபெற்று முடிந்த உலகக் கிண்ணத் தொடரே எனது கடைசி சர்வதேச போட்டியாக இருக்கும் என நினைக்கிறேன். துரதிர்ஷ்டவசமாக மோசமான தோல்விகளுடன் விடை பெறுகிறேன். பிரேசில் கால்பந்துக்கு இது ஒரு மோசமான தருணம். இந்த சோகத்தை மறந்து இயல்பான வாழ்க்கைக்கு திரும்பவிரும்புகிறேன். அடுத்த ஆண்டு 35 வயதில் கோபா-அமெரிக்கா தொடரில் விளையாடுவது சரியாக இருக்காது. 2018 உலக கோப்பையில் விளையாட வாய்ப்பே இல்லை என்று தெரிந்த பின்னரும் அணியில் நீடிப்பது நியாயம் இல்லை என்பதை உணர்ந்துள்ளேன்.

**ஜூலியோ சீசர் (பிரேசில் கோல் காப்பாளர்)**

பிரேசில் அணியின் பயிற்சியாளராக நீடிப்பது குறித்த முடிவை, பிரேசில் கால்பந்து கூட்டமைப்பு (சி.பி.எப்.,) தலைவரிடம் விட்டுவிட்டேன். அவர் எடுக்கும் முடிவுக்கு நான் கட்டுப்படுவேன். இது குறித்து இனிமேல் எவ்வித கருத்தும் தெரிவிக்கப்போவதில்லை. தொடரை வெற்றியுடன் ஆரம்பித்த பிரேசில் அணிக்கு, முடிவு சரியாக அமையவில்லை. நான்காவது இடம்பிடித்ததற்காக வீரர்களைப் பாராட்டுகிறேன். நெதர்லாந்துக்கு எதிரான போட்டியில் ஆரம்பத்திலேயே கோல் வழங்கியமை பின்னடைவை ஏற்படுத்தியது. ஜேர்மனிக்கு எதிரான அரையிறுதியில் கடைசி 6 நிமிடங்களில் பிரேசில் அணி வீரர்கள் சிறப்பாக விளையாடினர். ஒட்டுமொத்தமாக பார்க்கையில், இத்தொடரில் வீரர்களின் செயற்பாடு அருமையாக இருந்தது. கடந்த ஆண்டு நடந்த கான்பெடரேஷன் கோப்பை தொடரில் அசத்திய அதே வீரர்கள் தான் உலக கோப்பையிலும் விளையாடினர். அடுத்த உலக கோப்பை தொடருக்கு முன், சிறந்த அணியை உருவாக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. கடந்த மூன்று உலக கோப்பை தொடரில், 2 முறை பிரேசிலுக்கும், ஒரு முறை போர்த்துக்கல்லுக்கும் பயிற்சியாளராக இருந்தேன். இதில் 2002இல் பிரேசில் அணி கோப்பை வென்றது, 2006இல் அரையிறுதி வரை சென்ற போர்த்துக்கல் அணி, 4ஆவது இடம் பிடித்தது. இம்முறை பிரேசில் அணி 4ஆவது இடம் பெற்றது. கால்பந்து போட்டிகளில் கடைசி நிமிடம் வரை எது வேண்டுமானாலும் நடக்கலாம். ஒரு நிமிடத்தில் சொதப்பினால் கூட எதிரணியினர் கோல் அடித்துவிடுவார்கள். ஜேர்மனிக்கு எதிரான தோல்வி, பிரேசில் அணியின் கால்பந்து வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட மோசமான தோல்வி.

**ஸ்காலரி (பிரேசில் பயிற்றுநர்)**



# ஒரே இரவில் நாயகனான மரியோ

வெற்றிக்கான கோல் எப்பொழுது விழும் என்று மைதானத்தில் தவமாய் தவம் கிடந்த சுமார் 79 ஆயிரம் பேருக்கும், தொலைக்காட்சியிலும் வச்ச கண் வாங்காமல் கொட்டக் கொட்ட பார்த்துக் கொண்டிருந்த 100 கோடிக்கும் அதிகமான இரசிகர்களுக்கும் 113ஆவது நிமிடத்தில் விடை கொடுத்த, மரியோ கோட்சே ஒரே இரவில் ஜேர்மனியின் தேசிய நாயகனாகி விட்டார்.

22 வயதான மரியோ கோட்சே, 88ஆவது நிமிடத்தில் குளோசுக்கு பதிலாக மாற்று ஆட்டக்காரராக இறங்கியவர். மற்ற வீரர்கள் களத்தில் ஓடி ஓடி களைத்துப் போன நிலையில் புத்துணர்ச்சியுடன் களம் புகுந்து, ஆர்ஜன்ரீனாவின் கனவை சிதைத்து விட்டார். உலக கிண்ண கால்பந்துத்தொடரில் இறுதி ஆட்டத்தில் வெற்றிக் கோலை அடித்த முதல் மாற்று ஆட்டக்காரர் இவர் தான். பேராசிரியரின் மகனான கோட்சேவுக்கு இது தான் அறிமுக உலக கிண்ண தொடராகும். இதுவரை 35 சர்வதேச போட்டிகளில் விளையாடி 11 கோல்கள் அடித்துள்ளார். இதில் நடப்பு உலக கோப்பையில் அடித்த 2 கோல்களும் அடங்கும்.

உணர்ச்சிவசப்பட்ட நிலையில் பேசிய கோட்சே, என்னால் எதையும் நம்ப முடியவில்லை. மகிழ்ச்சியை எப்படி விவரிப்பது என்று தெரியவில்லை. எனது கனவு இன்று நனவாகி விட்டது. ஜேர்மனி அணியை நினைத்து மிகவும் பெருமைப் படுகிறேன் என்றார்.

இதேவேளை, மாற்று ஆட்டக்காரராக அவரை களத்திற்கு அனுப்பிய போது பயிற்சியாளர் ஜோகிம் லோ என்ன சொன்னார் தெரியுமா? மெஸ்சியை விட சிறந்தவர் என்று நீ நிரூபித்து காட்டு. அதுவே உலகக் கிண்ணம் யாருக்கு என்பதை முடிவு செய்வதாகவும் இருக்கும் என்று கூறியிருக்கிறார். குரு சொன்ன வார்த்தையை சிரம் மேற்கொண்டு செயற்பட்ட கோட்சே, அதை கச்சிதமாக செய்து முடித்து, இப்போது பாராட்டு மழையில் நனைந்து கொண்டிருக்கிறார். பயிற்சியாளர் ஜோகிம் லோ கூறுகையில், கோட்சே, அதிசயத்தக்க ஒரு வீரர். அவரால் எந்த நிலையிலும் சிறப்பாக விளையாட முடியும். அவர் உயரிய ஆட்ட நுணுக்கம் கொண்டவர். இந்த ஆட்டத்தின் முடிவை மாற்றும் சக்தி அவருக்கு உண்டு என்பதை அறிவேன். அதைத் தான் இன்று செய்து காட்டியிருக்கிறார் என்றார்.

## வாழ்த்து மழையில் ஜேர்மனி

நான்காவது முறையாக சம்பியன் பட்டம் வென்ற ஜேர்மனி அணியையும், வெற்றிக்கான கோல் அடித்த கோட்ஸியையும் அந்நாட்டு பத்திரிகைகள் ஏகத்துக்கும் புகழ்ந்துள்ளன. டீ வெல்ட் பத்திரிகையில், ஜேர்மனி கொடியில் உள்ள மூன்று வண்ணங்களில் மூன்று வார்த்தைகளில் தலைப்பு வெளியிடப்பட்டுள்ளது.

மற்றொரு பத்திரிகை, கோட்ஸியை கால்பந்தின் கடவுள் என்று புகழ்ந்துள்ளது. மற்ற பத்திரிகைகள் முதல் பக்கத்தில் சம்பியன் என தலைப்பிட்டு, பிற பக்கங்களில் அணியின் செயற்பாட்டை விலாவரியாக விவரித்துள்ளன. பயிற்சியாளர் ஜோகிம் லூவை அனைத்து பத்திரிகைகளும் பாராட்டியுள்ளன.

இதேவேளை, ஜேர்மனி - ஆர்ஜன்ரீனா மோதிய இறுதிச் சுற்றை ஜேர்மனியில் மொத்தம் 34.65 மில்லியன் பேர் தொலைக்காட்சியில் கண்டு இரசித்துள்ளனர். இதற்கு முன் பிரேசிலுக்கு எதிரான அரையிறுதியை 32.57 மில்லியன் பேர் பார்த்தனர். இது தொலைக்காட்சியில் பார்த்தவர்கள் மட்டுமே. இதுதவிர இலட்சக்கணக்கானோர் பொது இடங்களில் திரண்டு ஆட்டத்தைக் கண்டுகளித்தனர்.

## இன்றைய ஆட்

(மட்டுவில்)

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் மாபெரும் கரப்பந்தாட்டத் தொடரின் ஏ பிரிவுக்கான அரையிறுதி ஆட்டமொன்று இன்று இரவு நடைபெறவுள்ளது. இதில் ஆவரங்கால் மத்தி அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன் அணி மோதவுள்ளனமை குறிப்பிடத்தக்கது.

# பிரேசிலுக்கு பிபா பாராட்டு

பிரேசிலில் நடைபெற்ற உலகக் கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுத்தொடர் சிறப்பான முறையில் பூர்த்தியடைந்ததாக சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் (பிபா) தலைவர் செப் பிளட்டர் தெரிவித்துள்ளார்.

கால்பந்தாட்ட சுற்றுத்தொடரின் ஏற்பாடுகளை பத்து புள்ளிகளின் அடிப்படையில் மதிப்பிடும் பட்சத்தில், பிரேசிலின் ஏற்பாடுகளுக்கு 9.25 புள்ளிகளை வழங்க முடியும். கணனிகள், பேஸ்புக் தரவுகள் போன்றவற்றின் அடிப்படையில் ஆராய்கையில் இதுவரை நடந்த உலகக்கிண்ண போட்டிகளில் இந்த சுற்றுத்தொடர் மிகச்சிறப்பானது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ண கால்பந்தாட்ட சுற்றுத்தொடர் ஆரம்பமாவதற்கு முன்னதாக, போட்டி ஏற்பாடுகள் பற்றி பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இந்த சுற்றுத்தொடரை பிரேசில் அரசாங்கம் சிறப்பாக நடத்தி முடிக்குமா என்று பல்வேறு ஊடக நிறுவனங்கள் கேள்வி எழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இறுதிப் போட்டி; டுவிட்டரில் சாதனை

ஜேர்மனி, ஆர்ஜன்ரீனா அணிகள் மோதிய உலகக் கிண்ணக் கால்பந்து போட்டியின்போது, ஒரு நிமிடத்தில் 6 இலட்சத்து 19 ஆயிரம் டுவிட்டர செய்திகள் அனுப்பப்பட்டு, புதிய வரலாறு படைக்கப்பட்டது. உலகக் கிண்ணக் கால்பந்து தொடரில், டுவிட்டர், பேஸ்புக் உள்ளிட்ட சமூகவலைத்தளங்களில் கோடிக்கணக்கில் செய்திகள் அனுப்பி மகிழ்ந்தனர் இரசிகர்கள்.

ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்ற இறுதிப் போட்டியின் போது, மொத்தம் 3.21 கோடி முறை டுவிட்டர் செய்திகள் அனுப்பப்பட்டன. இருப்பினும், இது, பிரேசில், ஜேர்மனி போட்டிகள் மோதிய அரையிறுதி போட்டியில் அனுப்பப்பட்ட 3.56 கோடி டுவிட்டர் எண்ணிக்கையை விட குறைவு தான். அதேநேரம், இறுதிப் போட்டியின் போது ஜேர்மனியின் மரியா கோட்சா கோல் அடித்த ஒரு நிமிடத்தில் மட்டும், 6,18,725 டுவிட்டர் செய்திகள் பரிமாறப்பட்டன. இது ஒரு உலக சாதனையாக அமைந்தது. கடந்த 2010 உலக கோப்பை இறுதிப் போட்டியில், ஸ்பெயின், நெதர்லாந்தை வீழ்த்திய போது, ஒரு நிமிடத்தில் 2000 டுவிட்டர் செய்திகள் தான் அனுப்பப்பட்டன.

# இன்று முதல் டெஸ்ட்

(கொழும்பு)

தென்னாபிரிக்க, இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் முதல் ஆட்டம் இன்றைய தினம் காலியில் ஆரம்பமாகவுள்ளது. இரு அணிகளுக்கு மிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை சொந்த மண்ணில் இலங்கை அணி இழந்திருப்பதால், டெஸ்ட் தொடரைக் கைப்பற்றிக் கொள்ள முயற்சிக்கும் என கிரிக்கெட் வல்லுநர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தொடர் சவால் நிறைந்ததாக இருக்கும் என டெஸ்ட் தொடருக்கு முதன் முறையாகத் தலைமை தாங்கும் அம்லா தெரிவித்துள்ளார்.





உலகக் கிண்ணத்தை வென்று தாயகம் திரும்பிய ஜேர்மனி அணிக்கு நேற்று இரசிகர்களால் உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது.

# மாட்டு வண்டி சவாரி; அளவெட்டி வாசி முதலிடம்



(நீர்வேலி)

நீர்வேலி மாட்டுவண்டிச் சவாரித் திடலில் நடாத்தப்பட்ட மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியில் அளவெட்டியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சிவஞானம் முதலிடத்தைப் பிடித்தார்.

இரட்டை மாடுகளைக் கொண்ட இந்தப்போட்டி, யாழ். மாவட்ட மாட்டுவண்டிச் சவாரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடாத்தப்பட்டது.

இந்தப் போட்டியில் மொத்தமாக 16 போட்டியாளர்கள் பங்குபற்றினர். இதில், நவக்கிரியைச் சேர்ந்த அரியகுட்டி கோபாலன் இரண்டாமிடத்தையும் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த செல்வநாயகம் ராஜ்கரன் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

யாழ். மாவட்டத்தில், பொன்னாலை மான்பாஞ்சான் வெளி, வட்டுக்கோட்டை கொக்குத்திடல், நீர்வேலி சவாரித்திடல், நவாலி கொட்டுக்கட்டி, கீரிமலை கருகும்பனை, வடமராட்சி அந்தணத்திடல் போன்ற இடங்களில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (48)

## விளையாட்டுச் செய்திகள்

# வென்றது டிறிபேக்

(பருத்தித்துறை)

சாவகச்சேரி டிறிபேக் பழைய மாணவர் அணிக்கும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் அணிக்கும் இடையில் நடைபெற்ற சிநேக பூர்வ கிரிக்கெட் போட்டியில் ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் அணி நான்கு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் ஆடிய சாவகச்சேரி டிறிபேக் அணி 46.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 230 ஓட்டங்களைப் பெற்றது. இதில் என்.நிலான் 31, எம்.பிரதாபன் 38, எஸ்.ஹரிகரன் 30, எம்.லக்சன் 32 கே.கோபி 21 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 231 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் அணி 44.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 212 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் எஸ். ஹரி 73 ஓட்டங்களைப் பெற்றார்.

# இந்து இளைஞர், கலைமதி, நவஜீவன் அரையிறுதிக்கு முன்னேற்றம்

(மட்டுவில்)

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் மாபெரும் கரப்பந்தாட்டத் தொடரின் ஏ பிரிவுக்கான போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர், புத்தூர் கலைமதி, உடுப்பிட்டி நவஜீவன் அணிகள் அரையிறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளன.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் அனுசரணையுடன் இடம்பெற்று வரும் இப்போட்டித் தொடர் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்று வருகின்றது.

இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏ பிரிவுக்கான மூன்று போட்டிகள் நடைபெற்றன. முதலாவது போட்டியில் அச்சுவேலி விக்னேஸ்வரா அணியும் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் ஆனைக்கோட்டை பிரதீப் அணியும் புத்தூர் கலைமதி அணியும் மோதின. இதில் புத்தூர் கலைமதி அணி 2-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மற்றுமொரு போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன் அணியும் அச்சுவேலி விக்னேஸ்வரா அணியும் மோதின. இதில் உடுப்பிட்டி நவஜீவன் அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

# விமானப்படை அணியிடம் வீழ்ந்தது வலிகாமம் லீக் பெண்கள்



இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பெண்கள் கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட போட்டியில், இலங்கை விமானப் படை அணி வெற்றி பெற்றது.

இப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் வலிகாமம் கால்பந்தாட்ட லீக் அணியும் இலங்கை விமானப் படை அணியும் மோதின.

முதல் பாதியாட்டத்தில் விமானப்படையணி அடுத்தடுத்து 3 கோல்களைப் பெற்று முன்னிலையில் இருந்தது.

தொடர்ந்து இரண்டாவது பாதியாட்டத்திலும் விமானப்படையணி ஆதிக்கம் செலுத்தி மேலும் 4 கோல்களைப் போட்டது. இறுதியில், விமானப்படையணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

# ஜெயந்திநகர் அணியை வீழ்த்தி கிண்ணம் வென்றது உருத்திரபுரம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டுக் கழகம் நடாத்திய மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை உருத்திரபுரம் அணி கைப்பற்றிக் கொண்டது.

கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடரில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பல அணிகள் பங்கு கொண்டன.

அணிக்கு ஏழு பேர் கொண்ட இச்சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் உருத்திரபுரம் மற்றும் ஜெயந்திநகர் அணிகள் முட்டி மோதிக் கொண்டன.

உருத்திரபுரம் அணி ஆரம்பம் முதலே சிறப்பாக ஆடியதுடன் பந்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. இதன் காரணமாக முற்பாதி ஆட்டத்தின் 21ஆவது நிமிடத்தில் உருத்திரபுரம் வீரர் பிரதீஸ் முதல் கோலை அடித்து, அணியின் ஸ்திர நிலையை அதிகரித்தார். பதில் கோல் அடிக்கும் முனைப்புடன் ஜெந்திநகர் அணி முயன்றபோதிலும் முற்பாதி ஆட்டத்தில் கைகூடவில்லை. முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை உருத்திரபுரம் அணி 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது.

பிற்பாதி ஆட்டம் ஆரம்பமாகி 9ஆவது நிமிடத்தில் உருத்திரபுரம் வீரர் மொறீஸ் ஹரிஸ் சிறப்பானதொரு கோலை அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார். விரக்தியுறாது தொடர்ந்து போராடிய ஜெயந்திநகர் அணியால் இறுதி வரை கோல் அடிக்க முடியவில்லை. நிறைவில் உருத்திரபுரம் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

போட்டியின் ஆட்டநாயகனாக பிரதீஸ், தொடர் நாயகனாக மொறீஸ் ஹரிஸ், சிறந்த கோல் காப்பாளராக பிரதீபன், சிறந்த அணியாக பூநகரி தம்பிராய் அண்ணா அணி தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன.

கனகபுரம் விளையாட்டுக்கழகத் தலைவர் றெஜி அலோசியஸ் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மிட்டமிடல் பணிப்பாளர் மோகனரூபன் கலந்து கொண்டு விருதுகளை வழங்கிக் கௌரவித்தார். (81)

# திலீப்குமார் – சாயிராபானு காதல்!




**'Dilip kumar - The substancs and the shadow" என்ற தலைப்பில் 'ஸ்கிரீன்' உதயதாரா நாயர் எழுதியுள்ள, பிரபல ஹிந்தி நடிகர் திலீப்குமாரின் சுயசரிதை நூலில் இருந்து....**

1967 ஆம் ஆண்டில் "ஸ்கிரீன்" சினிமா இதழில் நான் எழுதிக் கொண்டிருந்தபோதே திலீப்குமாரைப் பற்றி ஓரளவு தெரிந்து வைத்திருந்தேன். ஒரு மாணவியாக சினிமா எழுத்தாளர் என்ற முறையில் நான் அவரை படப்பிடிப்புகளின் போது கூர்ந்து கவனித்து வியந்ததுண்டு. அவரது மனைவி சாயிராபானு என்னுடைய நெருங்கிய தோழி.

தன்னைப் பற்றி பிறரிடம் அவ்வளவு சுலபமாக எதையும் கூற விரும்பாத திலீப்குமார், தன்னுடைய சுயசரிதையை எழுதும்படி என்னிடம் கூறியதை மிகப்பெரிய வாய்ப்பாக கருதுகிறேன்.

திரையுலகில் அவருக்கு குரு என்று யாரும் இருந்ததில்லை. நடிகராக வேண்டுமென்ற ஆசையும் இல்லை. 1942ஆம் ஆண்டில் தன்னுடைய "பாம்பே டாக்கி" அலுவலகத்தில் தேவிகாராணி இவரைச் சந்தித்தபோது நடிகராக ஒப்பந்தம் செய்து கொண்டார். அவருக்கு அப்போது மாதச் சம்பளம் ரூ.1250.

சினிமா உலகம் போட்டி நிறைந்தது என்பதோடு வெற்றியைத் தக்கவைக்க இரக்கமற்ற கடின உழைப்பு தேவையாக இருக்கிறது என்பது அவரது கருத்தாக இருந்தது. அவர் என்னிடம் ஒருமுறை கூறினார். "நீங்கள் சமையல் செய்தாலும், காய்கறிகளை வாங்கினாலும் அதில் ஒரு அவுன்ஸ் சக்தியையாவது செலவழிக்க வேண்டும். எதையுமே சுலபமாகச் செய்யலாம் என்று நினைக்கக் கூடாது."

நான் அவரது சுயசரிதையை எழுதி முடிக்க பத்தாண்டுகள் ஆகிவிட்டன. ஏனெனில் அவர் பரபரப்பாக இருந்தார். ராஜ்யசபா உறுப்பினராகவும் பல்வேறு நிகழ்ச்சிகளில் தொடர்புடையவராகவும் இருந்தார். மேலும் அவர் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதிலும் அதிக ஆர்வம் காட்டவில்லை. எப்போது நேரம் கிடைத்ததோ அப்போது மட்டுமே சந்தித்து வந்தோம்.

அனைத்து தகவல்களும் கிடைத்த பின்னர் ஒரே ஆண்டில் புத்தகத்தை எழுதி முடித்தேன். அவ்வப்போது ஒவ்வொரு அத்தியாயத்தையும் அவரிடம் படித்து காட்டுவேன். அவராகவே படிக்க மாட்டார். அதுதான் எனக்கு குறையாக இருந்தது. ஆனால் சாயிராபானு ஒவ்வொரு வார்த்தையையும் வரிகளையும் கூர்ந்து படிப்பார்.

அவர்களுக்கு திருமணமாகி இப்போது 48 ஆண்டுகளாகின்றன. திலீப்குமாரின் முந்தைய வாழ்க்கை மற்றும் அவரது குடும்பத்தைப் பற்றி சாயிராவுக்கு தெரியும்.

சாயிராபானு, திலீப்குமார் மீது கொண்ட காதல் தெய்வீகமானது என்று நான் அவ்வப்போது அவரிடம் கூறுவதுண்டு. புராணக்கதைகளில் பெண்கள் கணவனை மீட்டுத்தரும்படி கடவுளிடம் வேண்டுவது போன்றது அவரது காதல். திலீப்குமார் உடல் நலமின்றி ஏதும் சாப்பிடாமல் இருந்தால் இவரும் ஏதும் சாப்பிடாமல் பட்டினி கிடப்பார். அவரை எங்கே இழந்து விடுவோமோ என்ற பயம் அவருக்கிருந்தது.

தற்போது அவருக்கு 92 வயதானலும் சாயிராவின் அக்கறையிலும் கவனிப்பிலும் எந்தவித மாறுதலும் இல்லை, சாயிராவை பொறுத்தவரை அவர் திலீப்குமாரின் ரசிகை, மனைவி, நெருங்கிய தோழி, தாய் எனப் பல்வேறு முகங்களை கொண்டவராகவே நான் அவரைப் பார்க்கிறேன். அவர் இல்லாமல் சாயிராவால் தனித்திருக்க முடியாது.

ஒருமுறை படப்பிடிப்பு முடிந்து விமானத்தில் திரும்பும்போது திலீப்குமாரை சந்தித்த சாயிராபானு அந்த நிமிடமே அவரது தாயாரிடம் கூறினாராம். "இதுவரை படத்தில் நடிப்பதற்காக வாங்கிய முன் பணத்தையெல்லாம் திருப்பி கொடுத்துவிடு. நானும் அவரும் சேர்ந்து கணவன் - மனைவியாக வாழ்வதைவிட வேறு வழி இருப்பதாக தெரியவில்லை" இதைக்கேட்டு சாயிராவின் தாய் நசீமாபானு மட்டுமல்ல. திலீப்குமாரும் அதிர்ச்சியடைந்தாராம்.

அப்போது சாயிராபானு திரையுலகில் உச்சக்கட்டத்தில் இருந்தார். உடனே திலீப்குமார், "யோசித்து முடிவெடுக்க நம் இருவருக்கும் போதுமான நாள்கள் இருக்கின்றன அவசரப் படாதே" என்று கூறினாராம்.

"யோசித்து முடிவெடுப்பதற்குள் வயதாகிவிடும். வயதான பிறகு ஆசைகளை நிறைவேற்றுவதில் அர்த்தமே இல்லை" என்று சாயிரா, திலீப்குமாரைத் திருமணம் செய்து கொள்வதில் பிடிவாதமாக இருந்தார். அப்போது சாயிராவுக்கு 22 வயதுதான். திலீப்குமார் நல்ல அனுபவமும் படிப்பாற்றலும் பெற்றிருந்தார்.

திலீப்குமாரை, சாயிரா மணந்து கொண்டது அவரது இரண்டு சகோதரிகளுக்கும் பிடிக்கவில்லை. அவர்கள் சாயிராவை எப்படி நடத்தினார்கள் என்பதை இந்தப் புத்தகத்தில் விரிவாக எழுதியுள்ளேன். சாயிராவிடமிருந்து திலீப்குமாரை பிரிக்க



திட்டமிட்டதுடன் அவரை இரண்டாவது திருமணம் செய்து கொள்ளும் படியும் தூண்டினர். சாயிராவுக்கு குழந்தைப்பேறு இல்லை என்பதே அவர்கள் இவரை வெறுப்பதற்கு காரணமாக இருந்தது. இந்தச் சூழ்நிலையை இருவருமே மிகவும் பொறுமையுடன் கையாண்டனர்.

திருமணத்திற்கு முன்பு காமினி கவுசல், மதுபாலா ஆகியோருடன் தொர்டர்பிருந்ததை திலீப்குமார் இந்தப் புத்தகத்தில் நாகரீகமாக வெளிப்படுத்தியிருக்கிறார். வைஜெயந்திமாலா, வஹிதா ரஹ்மான் ஆகியோருடன் இவருக்கு தொடர்பு இருந்ததாக கூறப்பட்டாலும் "நாங்கள் நல்ல நண்பர்களாகவே இருந்தோம்" என்கிறார்.

பன்னிரண்டு குழந்தைகளில் நான்காவதாகப் பிறந்த யூசுப்கான் பின்னர் திலீப்குமாராக மாறிய போதும் தன் சகோதர, சகோதரிகளின் வாழ்க்கையை மகிழ்ச்சியாக அமைத்து கொடுப்பதில் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார். பல்வேறு நல திட்டங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாலும் எந்த நேரத்திலும் அவர் தன்னை வெளிப்படுத்திக் கொண்டதில்லை.

"லோரன்ஸ் ஒப் அரேபியா" படத்தில் நடிக்க வந்த வாய்ப்பை அவர் உதறித்தள்ளினார். இரண்டாம் கட்ட நடிகராக அதில் நடிக்க விரும்பாததே காரணமாகும். இதே போன்று சத்தியஜித்ரே படத்திலும் கதைக்கு தேவையான ஒருசில காட்சிகளில் மட்டும் நடிக்க அழைத்தபோது மறுத்துவிட்டார்.

சினிமாத் துறை முழுக்க முழுக்க வியாபாரமாக மாறிய போது நானும் சினிமா பத்திரிகைத் துறையிலிருந்து விலகிவிட்டேன். அமிதாப்பச்சன் வருகைக்குப் பின்னர் திரையுலகம் முற்றிலுமாக மாறிவிட்டது. பணமும் புகழும் மட்டுமே குறிக்கோளாக மாறிவிட்டது. இன்றைய தினத்தில் கோடிக் கணக்கில் சம்பாதிப்பதையே நடிகர்கள் விரும்புகிறார்கள். திறமையை வெளிப்படுத்தும் நடிகர்கள் வெகுவாகக் குறைந்துவிட்டனர்.

# பச்சைத்தண்ணியில் பலகாரம்

**- இடைக்காடு இளையபண்டிதன் -**



**சொ**ந்த செலவினங்கள் சிறிதுமின்றி சுலபமாகச் சம்பாதித்து தமது வசதிவாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ளுகின்ற மானிடப் பிறவிகள் சிலர் இப்போதும் இங்குள்ளனர். இன்னொருவரின் முதலீட்டில் இடைத்தரகராக இயங்கி, இயன்ற வரைக்கும் இலாபமீட்டுவதை இலக்காகக் கொண்டோரே இவர்கள். உடல் வியர்க்காமலும், உடை கசங்காமலும், உதடுகள் மூலம் தமது காரியங்களை உருப்படியாக சாதித்துக்கொள்ள முடிவது இவர்களின் கைதேர்ந்த கலை ஆகும்.

அகதிகளாக அலைந்த அந்த அவலமான காலகட்டத்தில் அகிலத்தின் அனுதாபப் பார்வையால் அனுகூலங்களை அடைந்திருப்பவர்களும், அதே "அகதிப் போர்வைகளை" இன்னும் கைவிடாமல் போர்த்திக் கொண்டபடி, அடுத்தடுத்து அனுசரணைகளை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றனர். சுயமான பிரயாசைகளை "சுளுவாக அசட்டை" (Simply ignore) செய்துவிட்டு, தமது அபிலாசைகளை அலுங்காமல் குலுங்காமல் அடைவதற்காக "குறுக்கோட்டம்" ஓடத் தயார் நிலையில் தான் அவர்கள் நிற்கிறார்கள். நிவாரணங்களை நீடித்துப் பெறத் துடிப்பதும், தொடர்ந்து பிறர் தயவிலே தங்கி தமது சீவனோபாய வழிவகைகளை நாடுவதும் ஒரு மனிதனின் சுயமரியாதைக்கு பேரிழுக்காகும் என்பது இவர்களுக்கு எள்ளளவும் எப்போதுமே உறைப்பதாயில்லை.

இன்னொரு சாராரோ வளப்படுத்தப்பட்ட இரவல் விவசாய பூமிகளில் வாகான பயிர்ச்செய்கையூடாகச் சிறந்த வருமானம் பெறுவர். நில உரித்தாளருக்குரிய நியாயபூர்வமான குத்தகைக் கொடுப்பனவுகளை மற்றும் அவசிய அவசர ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு இவர்கள் பெரிதும் தயங்குவர். அவை பற்றிய "பேச்சு - மூச்சுக்களையும்" தந்திரமாகத் தவிர்த்துக் கொள்வர். கடைசிச் சொட்டு வரை பாலையும், கடைசி அறுவடை வரை பயிர் விளைவையும் கறப்பதிலேயே இவர்கள் குறியாயிருப்பர்.

கால்நடைகளுக்கு உரிய ஊட்டம் உவந்தால்தான் உயரிய தேட்டம் பெறலாம். பயிர்களுக்கு முறை மாறாத பாசனமும், சேதனப் பசளைப் பிரயோகமும் செய்தால் தான் எல்லா உயிர்களுக்குமே குறைவிலாத போசனம் கிடைக்கும் என்பதில் நாட்டமேதுங் காட்டாமல் நசிந்து நடந்து கொள்வர். சோம்பியும் கிடப்பர்.

இவர்களின் சுற்றுப்புறங்களெங்கிலும் சிதறிய குப்பை கூளங்களும், கால்நடைக் கழிவுப் பரவல்களும் ஏராளமாய்க் கிடைக்கும். மழைகாலங்களில் தொற்றுநோய்க் காவிகளின் பெருக்கம் இங்கே தாராளமாக நடக்கும்.

இற்று இறந்த வேலி அடைப்புக்கள், அவை காரணமாக - திறந்த எல்லைகள், முகப்புகளிலேகூட பசுமைகாண மறந்த மர இனங்கள்... என, மொத்தத்தில் மனிதப் புழக்கமற்ற பாழிடங்களாகவே இவர்களின் வாழிடங்கள் பகிரங்கமாய்த் தெரியும்.

இந்த வளவுகளின் முழுவருமானங்களையும் தமது உச்சப் பயன்பாடுகளுக்கென சுவீகாரம் பெற்றிருக்கக்கூடிய இவர்களது பராமரிப்புக் கடப்பாடுகளின் பாரிய இலட்சணம் பார்ப்போருக்கு நன்றாகவே புரியும்.

இப்பேர்ப்பட்டவர்கள் தமது ஆகாரங்களைப் பொறுத்தவரை கொலஸ்ட்ரோல் (Cholesterol) பிரச்சினைகள் குறித்து அதிக கவனங்கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில், எண்ணெய் எதுவும் பாவிக்காமல் பச்சைத் தண்ணியிலேயே இவர்கள் பலகாரம் சுடுவார்கள். அதுவும் சவர்த்தண்ணி என்றால் உப்புச் செலவும் இவர்கட்கு மிச்சம்.

| சுருக்கமான வடிவம் | பொதுவான பெயர் | தமிழில் பெயர் |
|---|---|---|
| ச | ஷட்ஜம் | குரல் |
| ரி- | ரிஷபம் | துத்தம் |
| க | காந்தாரம் | கைக்கிளை |
| ம | மத்யமம் | உழை |
| ப | பஞ்சமம் | இளி |
| த | தைவதம் | விளரி |
| நி | நிஷாதம் | தாரம் |







கிளிநொச்சி முழங்காவில் மகாவித்தியாலயத்தின் வணிகமன்றத்தின் வணிக நாள் நிகழ்வு நேற்று முன்தினம் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றபோது விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்கப்படுவதையும் விருந்தினர்களுடன் வணிக மாணவர்களையும் காணலாம். (63)

# மன்னார் அந்தோனியார்புரம் கிராமத்தில்

# 103 குடும்பங்களுக்கு இந்திய வீட்டுத்திட்டம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இலுப்பக் கடவை அந்தோனியார்புரம் கிராமத்தில் மீள்குடியேறியுள்ள 103 குடும்பங்களுக்கு இந்திய வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கிராமத்தில் மீள்குடியேறி மக்கள் நிரந்தர வீட்டுத்திட்ட வசதிகள் இல்லாமல் தற்காலிக கொட்டகைகளிலும் வெவ்வேறு இடங்களில் உறவினர், நண்பர்கள் வீடுகளில் வாழ்ந்து வந்த நிலையில் தற்போது வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டுள்ளதால் இக்கிராம மக்கள் பெரும் நன்மை அடைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இதைவிட இக்கிராமத்தில் மீள்குடியேறி வசித்து வரும் மக்கள் வாழ்வாதார ரீதியாகவும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதாகவும் இம்மக்களுக்கு அடிப்படைவசதிகள் முழுமையாக ஏற்படுத்தப்படாது இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

மேலும் இக்கிராமத்தில் உப்புக்காற்று சடுதியாக வீசுவதால் கிணற்று நீர் மாசுபடுவதுடன் நிலமும் உவரடைவதாகவும் இதனால் எமது அன்றாட செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இக்கிராமத்திற்கும் வீட்டுத்திட்டம் வழங்குமாறு துறைசார்ந்த அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளதாகவும் இதனையடுத்தே தமக்காக வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளதாகவும் மகிழ்ச்சி தெரிவிக்கும் மக்கள் ஏனைய மக்களுக்கும் வீட்டுத் திட்டவசதிகளை வழங்கி அடிப்படைத்தேவைகளை பூர்த்தி செய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (140)

# இளைஞர்களின் அதிவேக போக்குவரத்தால்

# சிரமங்களுக்குள்ளாகும் பயணிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதிகளில் உள்ள இளைஞர்கள் அதிவேகமாக மோட்டார் சைக்கிள்களில் பயணம் செய்வதால் வீதியால் பயணிக்கும் பிரயாணிகள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக பாஷையூர், குருநகர், பாண்டியந்தாழ்வு, கொழும்புத்துறை, யாழ்.பிரதான வீதிகளில் இளைஞர்கள் அதிவேகமாக பயணம் செய்யும் போது பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் பெற்றோர் மற்றும் பேருந்துகள் தமது பாதுகாப்பிற்காக நின்று வழி விட்டுச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அதுமட்டுமன்றி அதிகமானோர் மாணவர்களை பாடசாலைகளில் விட்டு வேலைக்குச் செல்பவர்களாகவே காணப்படுகின்றனர். எனவே இந்த இளைஞர்களின் செயற்பாடுகளால் தமது நேரம் வீண் விரையம் செய்யப்படுவதுடன் காலை வேளையில் மனப்பயத்துடன் தமது பயணங்களை ஆரம்பிக்க வேண்டியுள்ளதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த இளைஞர்கள் பொதுமக்களுக்கு இடையூறான வகையில் செயற்படுவதாகவும் தமது உயிருக்கே உத்தரவாதம் இல்லாத நிலையில் வாகனங்களைச் செலுத்துவதாகவும் இதனால் விபத்துக்கள் அதிகரிப்பதற்குக் காரணமாக அமைவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இவர்களின் இந்த அநாகரீக செயற்பாடுகளை தடுத்து நிறுத்த போக்குவரத்து பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டால் இந்த செயற்பாடுகளை கட்டுப்படுத்த முடியுமெனவும் மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

# தேர்த்திருவிழா

சுதுமலை வடக்கு ஈஞ்சடி வைரவர் ஆலய தேர்த்திருவிழா நாளை வியாழக்கிழமை காலை இடம்பெறவுள்ளதுடன் இவ்வாலய தீர்த்தத் திருவிழா மறுநாள் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (85)

# வட்டுவாகல் சப்தகன்னிமாருக்கு

# வருடாந்த பொங்கல் விழா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வட்டுவாகல் அருள்மிகு சப்தகன்னிமார் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் வெகு சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

வட்டுவாகல் அருள்மிகு சப்த கன்னிமார் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் கடந்த 07 ஆம் திகதி தீர்த்தக்கரையில் உப்பு நீர் எடுக்கப்பட்டு விளக்கேற்றி 07 அடியார்களினால் நோம்பு இருந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை பொங்கல் ஆலய பூசகர் தெ.பகிர்தரன் அவர்களினால் அபிஷேகம் இடம்பெற்று மடப்பண்டம் எடுத்து வரப்பட்டு 07 கன்னிகளுக்கும் வலந்து ஒரே நேரில் வைத்து பொங்கல் விழா இடம்பெற்றுள்ளது.

இவ் ஆலயம் 500 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆலயமாகவும் காணப்படுகின்றது. இவ் 07 கன்னிகளும் 07 ஆவது இடமாக இவ் வட்டு வாகல் கரையோரத்தில் வந்து பாண்டி விளையாடியதாக வரலாற்றுக் கதையும் ஒன்று உண்டு. இவ் ஆலயத்தில் அடியார்கள் செடில்காவடி, காவடி, பாற்செம்பு போன்ற நேர்த்திக் கடன்களில் ஈடுபட்டுள்ளனர். முல்லை மாவட்ட 59 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் அடியார்களுக்கு அன்னதானமும் இராணுவ பொறுப்பதிகாரியினால் வழங்கப்பட்டுள்ளது.

ஆலய பரிபாலன சபையினால் இராணுவ அதிகாரிகளின் சேவை கருதி அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

# ஆடிவேல் மஹோற்சவம்

காரைதீவு மாவடி கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் மஹோற்சவம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 2 ஆம் திகதி பாற்குடபவனியும், 8 ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும் முத்துச் சப்பர ஊர்வலமும் 10 ... திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

இதனை முன்னிட்டு உற்சவ காலங்களில் மு.ப. 10 ...ணிக் கும்பபூசையும், மாலை 6.30 மணிக்கு உற்சவ பூசையும் இட... பெறும்.

# முரசின் இன்றைய பலன்

(16.07.2014 புதன்கிழமை)



ஜய வருஷம் ஆனிமாதம் 32 ஆம் திகதி.
பஞ்சமி / சித்தாமிர்தம்.
சதய நட்சத்திரம் பி.ப. 12.59 வரை. பின் பூரட்டாதி.
இராகு காலம 12.00 - 01.30 வரை. சுபநேரம 04.30 - 06.00 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தவறிழைத்த நபரை பவ்வியமாகக்கண்டித்து திருத்த வெளிக்கிட்டமை நன்மையைத்தக்க வைத்தல், தேடி வந்த நபர் தலைமறைவான செய்தியறிந்து துயர வெள்ளத்தில் மூழ்குதல். |
| ரிஷபம் | பதவி நிரந்தரமாக்க முயன்ற வேளை தராதரக்குறைவினால் அற்றுப்போதல், "பேஸ்புக் மூலம்" மாணப் பிரச்சினை ஏற்படலாமென்ற அச்சநிலை உருவாதல். |
| மிதுனம் | உணவில் கட்டுப்பாடின்மையால் நீரிழிவின் தாக்கம் அதிகரித்தல், காலப்பொழுதில் எழுதப்பட்ட ஜாதகம் பிழையெனக் கண்டுபிடித்து சரி செய்தல். |
| கடகம் | மருத்துவ வசதிகளை மேற்கொண்டும் குழந்தைப் பாக்கியம் கிட்டாது தெய்வசந்நிதியை நாடுதல், விவாகத்தில் பொருத்தக் குறைபாடு காணப்பட்டவேளை அம்மன்தாலி கட்ட முற்படல். |
| சிம்மம் | மதுபோதையில் சென்ற குழுவினரின் தாக்க முயன்ற செயல் கூக்குரலிட்டதால் விலகுதல், வைத்தியரின் ஆலோசனையின்றி மருந்துப் பொருட்களைப்பாவித்ததால் தேகசௌகரியம் பாதிப்படைதல். |
| கன்னி | பிரயாணத்தின்போது ஆவணக்குறைபாட்டினால் தண்டம் செலுத்தல், அடிக்கடி தொலைபேசியில் மிரட்டிவரும் நபரின் உபத்திரவத்தைத் தாங்காது சிம்மை மாற்றிவிடல். |
| துலாம் | வயது சென்ற முதிர்கன்னியின் திருமணத்ததை எண்ணிக் கவலைப்படல், பழுதடைந்த புலாலைப் பெற்றதால் மனையில் ரகளை ஏற்படல். |
| விருச்சிகம் | எவருக்கும் அவசரப்பட்டு வாக்கினைக் கொடுக்க முயல்வதை கைவிடுங்கள், சக ஊழியர்களைத் தட்டிக் கொடுத்ததால் வேலைப்பளு மீதமின்றி நிறைவேறிவிடல். |
| தனுசு | டெங்கை ஒழிப்பதற்காக குடும்பசகிதம் சிரமதானப் பணியில் ஈடுபடல், முன்பின் அறிமுகமில்லாதவர் உறவாட முயன்ற வேளை சந்தேகத்தினால் கைகழுவிடல். |
| மகரம் | முன்கூட்டியே திட்டமிட்டதால் வேலைகள் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் நிறைவேறல், புதியமனையை வாஸ்து சோதிட முறையில் கட்டியெழுப்ப பொருத்தமான நிலத்தைத்தேர்வு செய்தல். |
| கும்பம் | வீட்டைப் புதுப்பிக்க சொத்தின் ஒரு பகுதியைவிற்க முயலல், வரன்தேடி அலைந்ததால் தேக நிலைபாதிக்கப்பட்டு நோய் வாய்ப்படல். |
| மீனம் | சுண்டைக்காய் காற்பணம் சுமைகூலி முக்கால் பணமாக இருந்ததைக் கண்டு துயரடைதல், பொன்னான வாய்ப்பு கைக்கெட்ட வருகின்றவேளை உடும்புப்பிடியாக பற்றிக்கொள்ளுங்கள். |

# கட்டாக்காலி நாய்களுக்கு கருத்தடை சத்திரசிகிச்சை

## - சண்டிலிப்பாய் சுகாதாரவைத்திய அதிகாரி ஏற்பாடு -

வலி. தென்மேற்கு பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்த பெண்நாய்களுக்கு கருத்தடைச் சத்திரசிகிச்சை செய்வதற்கான ஒழுங்குகளை சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி மேற்கொண்டுள்ளார்.

வைத்திய அதிகாரியினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த நடவடிக்கைக்கு வலி.தென் மேற்கு பிரதேசசபை முழு ஆதரவையும் வழங்கியதையடுத்து தற்போது ஆனைக்கோட்டை மானிப்பாய் ஆகிய இடங்களிலுள்ள நாய்களுக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் மக்கள் வீதிகளில் சுதந்திரமாக நடமாட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதுடன் பலர்நாய்கடிக்கு இலக்காகியும் வருகின்றனர்.

இதனால் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகளிலிருந்து மக்களைக் காப்பாற்றும் நோக்குடனும் கட்டாக்காலி நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்குடனும் பெண் நாய்களுக்கு சத்திரசிகிச்சை செய்வதற்கான ஒழுங்குகளை வைத்திய அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். வீடுகளில் வளர்க்கும் நாய்களுக்கு சத்திர சிகிச்சை செய்ய விரும்புவோர் பிரதேசசபை சுகாதார பரிசோதகருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# புதுமுக மாணவர்களுக்கான வழிகாட்டி நிகழ்ச்சித்திட்டம்

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்துக்கு கல்வியாண்டு 2012/2013 இல் கலை இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் இசை, நடனம்,சித்திரமும் வடிவமைப்பும் ஆகிய கற்கை நெறிகளுக்கு தெரிவு செய்யப்பட்டு பதிவை மேற்கொண்ட புதுமுக மாணவர்களுக்கான புதிய கல்வியாண்டு 2012/2013 இற்கான வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம் நடைபெறவுள்ளது.

கலைப்பிரிவுக்கு எதிர்வரும் 21ஆம் திகதி காலை 9மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தில் பிரதான வளாகமான கைலாசபதி கலையரகத்திலும், இசை நடனம் , சித்திரமும் வடிவமைப்பு மாணவர்களுக்கு எதிர்வரும் 23ஆம் திகதி காலை 9மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைக்கழ்கத்திலும் நடைபெறவுள்ளது.

எனவே இந்நிகழ்ச்சித்திட்டத்துக்கு குறிப்பிட்ட திகதிகளில் காலை 8.30மணிக்கு மாணவர்களை சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.



அண்மையில் யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் நடைபெற்ற முன்பள்ளிகளுக்கான வலயமட்ட விளையாட்டு விழாவில் தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தலைவர் லயன்ஸ் த.இரவீந்திரன் பரிசில் வழங்கிக் கெ்ளரவிப்பதைப்பதைக் காணலாம். (02)

# தமிழறிஞர் அகளங்கனுக்கு வவுனியாவில் மணிவிழா

(வவுனியா)

தமிழறிஞர் கலாநிதி தமிழ் மணி அகளங்கனுக்கான மணி விழா எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வாழ்த்துரைகளை யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர்களான அம்மன்கிளி முருகதாஸ்,செ.யோகராஜா, முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச.அருளானந்தம் காப்பியக்கோ டாக்டர் ஜின்னாஷ ஷரிபுத்தீன் அருட்தந்தை தமிழ்நேசன் அடிகளார் உள்ளிட்ட பலர் வழங்கவுள்ளனர். தொடர்ந்து இந்நிகழ்வில் அதிதிகளாக ஜனாதிபதி சட்டத்தரணி மு.சிற்றம்பலம் வவுனியா அரசாங்க அதிபர் எம்.கே.பந்துல ஹரிஸ்சந்திர, வவுனியா பிரதேச செயலர் கா.உதயராஜா, யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் க.அருள்வேல் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கு.சிதம்பரநாதன் வவுனியா தெற்கு வலய கல்விப்பணிப்பாளர் திருமதி எஸ்.அன்ரன்சோமராசா வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. பராசக்தி கணேசலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து இந்நிகழ்வில் முற்றத்துக்கரடி (சிறுகதை) வன்னிப்பிரதேச வயற்பண்பாடு (ஆய்வு) ஆகிய இரு நூல்கள் வெளியிடப்படவுள்ளதுடன் தமிழ்வாழ்த்து (இசைத்திட முடியாது) இறுவெட்டு வெளியீடும் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து நூல்கள் மற்றும் இறுவெட்டுக்களின் வெளியீட்டுரை அறிமுகவுரை சிறப்புரை என்பனவும் இடம்பெறவுள்ளன.

# அவசர அம்புலன்ஸ் சேவை வரணியில்

வரணிப்பிரதேச மக்களின் நன்மைகருதி வரணிப்பிரதேச வைத்தியசாலை நிர்வாகம் அவசர அம்புலன்ஸ் சேவையை நடாத்தி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அவசர நோயாளர்கள் 0212050804 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி பயனடைய முடியுமென தெரிவிக்கப்படுகிறது.

மேலும் 35வயதிற்கு மேற்பட்டோருக்கான தொற்றாத நோய்களுக்கான கிளினிக் மாதந்தோறும் கடைசித்திங்கட்கிழமைகளில் நடைபெறுமெனவும் பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை விடுமுறை நாட்களில் பூச்சிமருந்து வழங்கப்படும் எனவும் வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.(150)

# ஆயுர் வேதம்



## அதிக கொட்டாவியைத் தடுக்க முடியுமா?

மூளையின் எல்லையற்ற சக்தியானது அங்குள்ள நரம்புகள் மற்றும் இரசாயனிகளால் வலுப்பெறப்படுகிறது. அதிக சிந்தனை அல்லது ஒரு செயலில் ஏற்படும் அதிக சிரத்தையின் மூலமாக மூளைப் பகுதியில் ஏற்படும் பிராண சக்தியின் குறைவும், கரியமில வாயுவின் தேக்கமும் காரணமாக அதிகமான கொட்டாவியை மூளையே ஏற்படுத்தி பிராண சக்திக்கான வரவை அதிகப்படுத்திக் கொள்வதற்கான ஓர் ஏற்பாடே கொட்டாவி எனலாம்.

பிராண சக்தியை மூளை பெறுவதன் மூலமாக மூளையானது குளிர்ச்சியடைகிறது. கரியமில வாயுவின் தேக்கமும் வெளியேறுகிறது.

பிராணசக்தியைப் பெறுவதற்கான பல வழிகளில் ஒரு சிறந்த வழியாக காலை நேரத்தில் சுறுசுறுப்புடன் உடலில் மேற்பகுதி சிறிது முன்புறம் சாய்ந்தவாறு சிறிது தூரம் நிமிர்ந்து நடை பழகுவது நல்லது. காலை நேரத்துத் தூய காற்றும் சூழ்நிலையும் மிகவும் இதமானது.

நுரையீரல் முழு அளவு விரிந்து சுருங்கும் தன்மையிழந்து மேலெழுந்தவாரியாக கால் பங்கு கூட நிறையாமல் மூச்சு இழுத்து விடும் நபர்களுக்கு இந்த மூளைப் பகுதியில் களைப்பும், பெருமூச்சும் ஏற்படும். அதனால் பிராண் சக்தியை நிரம்பப் பெற காலை நடை மிகவும் உதவும்.

பெருநடையாக மூச்சுத் திணறலின்றி நடக்குமளவிற்கு நடந்தால் போதுமானது. உடலை மிகவும் வருத்தாமல் உற்சாகத்துடன் நடைபயிலுவது ஆயுள், பலம், மேதை, ஜீரணசக்தி, கண் - காது முதலியவற்றின் கூர்மை ஆகியவற்றை அளிக்கவல்லது.

தொண்டை க்ரந்தி வீக்கம் எனப்படும் தைரோய்ட் உபாதையில் அதிக கொட்டாவி வருவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக கூறப்படுகிறது. அதற்கான பிரத்தியேக சிகிச்சைகளை ஆயுர்வேத மருத்துவரின் உபதேசப்படி செய்து கொள்வது நல்லது.

அதிக கொட்டாவியைத் தவிர்க்கவும், தலையில் உள்ள ஐம்புலன்களைப் பாதுகாக்கவும் ஒருசில ஆயுர்வேத சிகிச்சைமுறைகள் உங்களுக்கு நல்ல பலனைத் தரலாம்.

நயனாம்ருதம் எனும் கண்சொட்டு மருந்தை தினமும் காலையில் கண்ணிலிட்டு கண்களை மூடி சிறிது நேரம் பொறுத்திருந்து பிறகு தண்ணீரில் நனைத்த பஞ்சால் கண்களைத் துடைத்துவிட்டுக் கொள்வது கண்கள் அழகாக காட்சி தருவதற்கும், தெள்ளிய பார்வை பெறுவதற்கும் உதவும். நெருக்கமுடன் நெய்ப்புடன் இமைகள் வழவழவென்றிருக்கும்.

இரண்டாவதாக, அணு தைலம் என்ற இரசாயன கல்பமாகவுள்ள தைலம் ஆயுர்வேத முறையில் பிரசித்தம். மூளை நரம்புகளுக்கு வலிவு தர இது மிகச் சிறந்தது.

காலையிலும் இரவு தூங்கும் முன்னும் மல்லாந்து தலையணையின்றி படுத்து தலையை சிறிது மேலெழுமாறு வைத்துக் கொண்டு மூக்குத் துவாரங்களில் இரண்டு சொட்டு விட்டு நன்கு உறிஞ்சி நெற்றி, மூக்கின் இருபுறங்கள், மென்னி இவற்றை அழுத்தி தேய்த்துவிட்டுக் கொள்ள வேண்டும்.

முகம் நல்ல மழமழப்பு, பூரிப்பு, நித்திய யௌவனத்தைக் காட்டும். தலையிலுள்ள இரத்தக் குழாய்கள் அடைபடாது மூளையை தளர்ச்சியுறாமல் பாதுகாக்கக் கூடியது.

அரிமேதஸ் எனும் தைலத்தை வாயினுள் விட்டுக் கொப்பளிப்பதால் வாய்ப் பகுதி சுத்தமாவதுடன் பற்கள் வலுப்பெறும். நாக்கின் சுவைக் கோளங்கள் நன்கு செயல்படும். மூளைக்கு இரத்த ஓட்டத்தைச் சீராக்கித் தரும்.

வசாலஸூனாதி எனும் தைலத்தை நான்கைந்து சொட்டுக்கள் காதினுள் விட்டு வர மூளை மற்றும் காதிலுள்ள நுட்பமான நரம்புகளில் வாயுவின் வறட்சி ஏற்படாமல் வலிவூட்டும்.

க்ஷீரபலா எனப்படும் தைலத்தை வெதுவெதுப்பாக தலைக்குத் தேய்த்துக் குளிப்பதால் மூளை நரம்புகள் வலுப்படும். இவை ஐந்தும் புலன்களின் வழியாக மூளையை சுறுசுறுப்பாக்கி அதிகக் கொட்டாவியைத் தவிர்க்க உதவும் சில எளிய கை வைத்திய முறைகளாகும்.

### உணவே மருந்து

◆ சமையலில் வாசனைக்காகச் சேர்த்து, சாப்பிடும்போது தூக்கி எறியப்படும் கறிவேப்பிலையில் விற்றமின் ஏ மற்றும் பி சத்துக்கள் அதிகம்!

◆ வெந்தயத்தை தினமும் உணவில் சேர்த்துக்கொண்டாலே அது குடும்பக் கட்டுப்பாட்டு சமாச்சாரம் ஆகிவிடும் என்பது ஆச்சரியமான உண்மை!

◆ அளவில் சிறியதாக உள்ள சுண்டைக்காயில் 30 விதமான சத்துக்கள் உள்ளன!

◆ கருப்பட்டி கலந்த கேழ்வரகு கஞ்சியை தினமும் காலையில் குடித்துவந்தால் ஊளைச்சதை குறையும்.

◆ கோப்பி, தேநீர், இவற்றில் இஞ்சி சேர்த்தல் நல்லது. இது தொண்டை சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்க்கும்.

# காவலுக்கு இருந்தவர் தூக்கம்; தாக்கியது காட்டு யானை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட பொத்தானை வயல்வெளியில் காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளான விவசாயியான காவத்தமுனையைச் சேர்ந்த அலியார்சாலி அக்பர் (வயது 51) என்பவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வயல்வெளியிலுள்ள காவல் குடிசையில் இவர் உறக்கத்திலிருந்தபோதே, நேற்று முன்தினம் நள்ளிரவு யானையின் தாக்குதலுக்குள்ளானார்.

உடனடியாக வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர், மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

# கவிழ்ந்தது தோணி; உயிரிழந்தார் மீனவர்

நேற்று முன்தினம் மாலை வாவியில் மீன்பிடிப்பதற்காகச் செல்லும் மேலும் சிலருடன் சென்ற ஒருவரே, தோணி கவிழ்ந்ததில் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது சம்பவம் தொடரபிலான மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

# போலி நாணயத்தாளுடன் இளைஞன் கைது



(புத்தளம்)

புத்தளம் பிரதேசத்தில் 2000 ரூபா போலி நாணயத்தாளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் புத்தளம் பிரதேசத்திலுள்ள அரச வங்கியொன்றில் பணத்தை வைப்பிலிட முயற்சித்த சந்தர்ப்பத்திலேயே சந்தேக நபரை பொலிஸார் கைது செய்தனர்.

21 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அரசு கூட்டமைப்பு புரிந்துணர்வு பேச்சுவார்த்தை மூலமே கிட்டும்

## அமைச்சர் ராஜித சேனாரத்தின நம்பிக்கை



(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தும் நோக்கில் அரசும் கூட்டமைப்பும் பேச்சு நடத்தலாம். இது தொடர்பில் இரண்டு தரப்பினரும் கவனம் செலுத்தவேண்டும் என்றும் மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்தின தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய பிரச்சினைக்கு விரைவில் அரசியல் தீர்வு காணப்படவேண்டியது அவசியமாகும். இது தொடர்பில் நான் ஆரம்ப காலத்திலிருந்தே வலியுறுத்தி வருகின்றேன்.

இந்நிலையில் தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான சிறந்த யதார்த்தகரமான இடமாக நாடாளுமன்றத் தெரிவுக்குழு காணபபடுகின்றது. எனினும் நாடாளுமன்றத் தெரி வுக்குழுவில் இடம்பெறமாட்டோம் என்று கூட்டமைப்பு கூறிவருகின்றது.

இந்நிலையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பில் கூட்டமைப்புக்கு ஏற்பட்டுள்ள சந்தேகத்தைப் போக்கினால் மட்டுமே அந்தக் கட்சியை தெரிவுக்குழுவுக்குள் கொண்டு வர முடியும். அவ்வாறு தமிழ்க் கூட்டமைப்பின் சந்தேகத்தை போக்குவதற்காக அரசாங்கமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இரு தரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தலாம். இதனைத் தவிர வேறு வழியில்லை என்றே எனக்குத் தோன்றுகின்றது.

எனவே கூட்டமைப்பு நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு வரும் முன்னர் அரசாங்கமும் கூட்டமைப்பும் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு இணக்கப்பாட்டுக்கு வரலாம் என்பதை வலியுறுத்துகின்றோம். எவ்வாறெனினும் தேசியப் பிரச்சினைக்கு யதார்த்தமான தீர்வைக் காண்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவே பொருத்தமான சிறந்த இடம் என்பதன்னை எவரும் மறுக்க முடியாது.

எனினும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வரப்போவதில்லை என்று கூட்டமைப்பு கூறிக்கொண்டிருப்பதால் இணக்கப்பாட்டை ஏற்படுத்தவும் புரிந்துணர்வை உருவாக்கவும் அரசும் கூட்டமைப்பும் பேச்சு நடாத்தலாம். இது தொடர்பில் அரசாங்கமும் கூட்டமைப்பும் கவனம் செலுத்தவேண்டும் என்றார்.

# வெளிவாரி பட்டதாரிகளுக்கு கிழக்கு பல்கலையில் பட்டமளிப்பு




(மட்டக்களப்பு)

கிழக்கு பல்கலைக் கழகத்தில் வெளிவாரிப் பட்டப் படிப்புகளை நிறைவு செய்தவர்களுக்கான பட்டச் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை பல்கலைக் கழகத்தின் வந்தாறுமூலை வளாக நல்லையா மண்டபத்தில் நடைபெற்றது.

துணைவேந்தர் கலாநிதி கே.கோபிந்தராஜா தலைமையில நடைபெற்ற இப் பட்டமளிப்பு விழாவின் முதலாம் அமர்வில் 225 கலைமாணிப்பட்டங்களும் இரண்டாம் அமர்விலும் 203 கலைமாணிப்பட்டங்களும் 5 நிருவாகமாணிப்பட்டங்களும் தலா ஒவ்வொரு விஞ்ஞானமாணி மற்றும் விஞ்ஞான முகாமைத்துவமாணி பட்டங்களும் வழங்கப்பட்டன.

இப்பட்டமளிப்பு விழாவில் பிரதம அதிதியாக உயர்கல்வி அமைச்சின் அபிவிருத்திக்கான மேலதிக செயலாளர் பி.ரணேபுர கலந்து கொண்டார். அத்துடன், பீடாதிபதிகள், துறைத்தலைவர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# இணக்கத்துக்கு வராத கூட்டமைப்பின் யோசனையை ஏன் கேட்க வேண்டும்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தோடு எந்தவொரு இணக்கப்பாட்டையும் ஏற்படுத்திக்கொள்ளாத நிலையில் அரசு ஏன் கூட்டமைப்பின் யோசனைகளை கேட்க வேண்டுமென்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச்செயலாளர் டாக்டர் வசந்த பண்டார கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அரசியலமைப்பிற்கு அமைய மாகாண ஆளுநரை நியமிக்கும் அதிகாரமும் பதவி வகிக்கும் ஆளுநரின் பதவி நீடிப்பை மேற்கொள்வதற்குமான நிறைவேற்று அதிகாரமும் ஜனாதிபதிக்கு உள்ளது.

அதற்கமையவே ஜனாதிபதி மீண்டும் வடமாகாண ஆளுநராக மேஜர் ஜெனரல் சந்திரசிறியின் பதவிக் காலத்தை நீடித்துள்ளார்.

அத்தோடு வடமாகாணத்தை சார்ந்த பெரும்பாலான அரச ஊழியர்கள் சந்திரசிறி ஆளுநராக பதவி வகிப்பதை விரும்புகின்றனர்.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்ப்பு என்பது வெறுமனே அரசியல் உள்நோக்கங்கள் கொண்டதாகும்.

கிழக்கு மாகாண சபை ஆளுநரின் பதவிக்காலம் நீடிக்கப்பட்ட போது கூட்டமைப்பினர் எதிர்க்கவில்லை. மௌனமாகத்தான் இருந்தார்கள்.

இன்று வடமாகாண சபை ஆளுநரின் பதவிக்காலத்தை நீடிக்கும் போது மட்டும் அவர் இராணுவத்தை சேர்ந்த ஓய்வு பெற்றவர் என்பதால் எதிர்ப்பதாக கூறுகின்றனர்.

இவர்களிடம் ஒன்றைக் கேட்க விரும்புகின்றேன். ஓய்வு பெற்ற நீதியரசரான சி.வி. விக்கினேஸ்வரன் வடமாகாண சபை முதலமைச்சராக பதவி வகிக்க் முடியுமென்றால் ஏன் ஓய்வு பெற்ற இரா ணுவத்தை சேர்ந்த சந்திரசிறி ஆளுநராக பதவி வகிக்க முடியாது.

அத்தோடு, கூட்டமைப்பினர் அரசாங்கத்தோடு எந்த விதமான இணக்கப்பாட்டையும் கண்டு அதற்கமைய அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை. இவ்வாறான தோர் நிலையில் அரசாங்கம் ஏன் கூட்டமைப்பினரின் யோசனைகளைக் கேட்க வேண்டும் அதற்கான அவசியமே கிடையாது.

ஆளுநரை நியமிப்பதும் பதவிக்காலத்தை நீடிப்பதும் ஜனாதிபதியின் கையிலேயே உள்ளது. அந்த அதிகாரத்தை தட்டிப்பறிக்கவோ, விமர்சிக்கவோ எவருக்கும் அதிகாரம் கிடையாது என்றார்

# அச்சுவேலியில் ஆட்டுக் குட்டிகளை கடித்துக் குதறும் கட்டாக்காலி நாய்கள்

அச்சுவேலி தம்பாலை பகுதியில் மேய்ச்சலுக்காக கட்டிவிடப்படும் ஆடுகள் மற்றும் அவற்றின் குட்டிகளை கட்டாக் காலி நாய்கள் துரத்திக் கடித்துக் குதறிக் கொல்வதாக அப்பகுதி மக்களால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இப்பகுதியில் மேய்ச்சலுக்காக கட்டி விடப்பட்ட ஆடுகளின் குட்டிகளை கட்டாக காலி நாய்கள் கூட்டம் ஒன்று சேர்ந்து கடித்தக் கொன்றுள்ளது. இதனால் அப்பகுதி ஆடுவளர்ப்பாளர்களிடையே அச்சநிலை ஏற்பட்டுள்ளதாகவும் தமது ஆடுகளை மேய்ச்சலுக்காக கொண்டு சென்று அவற்றுடன் தாமும் நீண்ட நேரம் காத்திருந்த பின்பே வீட்டிற்கு அவற்றைக் கொண்டுவரும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே அப்பகுதியில் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் நாய்களை கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(85)

# பெண்கள் பாதணி தயாரிப்பு; கொழும்பில் அடுத்த மாதம் பயிற்சி



(கொழும்பு)

பெண்களுக்கான பாதணிகளைத் தயாரிப்பது தொடர்பான ஐந்து நாள் பயிற்சி நெறி ஒன்று அடுத்த மாதம் நடைபெறும். இலங்கை தொழில் பயிற்சி அபிவிருத்தி அதிகார சபை இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

தற்காலத்துக்கேற்ற நவீன டிசைன்களில் பாதணிகளை தயாரிப்பது அதற்கான மூலப் பொருட்களைத் நவீன தொழில் நுட்பத்துடன் பாவிப் பது, அந்த மூலப்பொருட்களை பெற்றுக் கொள்ளும் இடங்களை அறிமுகஞ்செய்வது போன்ற சகல விடயங்கள் குறித்தும் இங்கு விளக்கமளிக்கப்படும்.

பயிற்சியில் கலந்துகொள்வோருக்கு பெறுமதியான சான்றிதழ்களும் வ்ழங்கப்படும். இது தொடர்பான மேலதிக விபரங்களை அறிய விரும்புவோர், இலங்கை தொழில் பயிற்சி அபிவிருத்தி அதிகார சபை, 98, இரண்டாம் மாடி, ஹைலெவல் பிளாசா கட்டடம் தெல்கந்தை நுகேகொடை என்ற முகவரியுடன் அல்லது 0112815009 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என .இலங்கை தொழில் பயிற்சி அபிவிருத்தி அதிகார சபை தெரிவிக்கின்றது.

# க.பொ.த. (சா/த) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper
## ஆங்கிலம்

**READ the following note and FILL in the blanks. USE the words in the box. The first one is done for you.**

| me, very, for, it, you |
|---|

Dear Ruban,
Thankk you (1) ................................ the story book you have sent (2) ..................................... through Jeeva. I found it (3) .......................... .................... interesting. Did you read (4)

another later.

Shithra

**Test 2**
Fill in the blanks correctly with one of the following words.

(1) ------------------- April we went (2) ---------------------- a pilgrimage (3) ---------------------------- Kandy. We traveled (4) ------------------------------ home (5) ------------------------ van (5) ---------------------------- van (6) ---------------------- my uncle and his family. We traveled (7) -------------------------- eight O'clock and reached Hatton (8) -------------------------- the morning.

| By, with, to, at, in, on, from |
|---|

**Test 3**
**Fill in the blanks where nesessary with a, an of the**

Yesterday, he went to (1) ------------------ Maruthanarmadam market to buy some vegetables for his cooking. He thought to buy (2) -------------- apple, (3) ---------------------- orange and (4) ------------------ coconut. (5) --------------------- apple was fresh. But (6) -------------------- coconut was damaged. After (7) ------------------- few minutes he returned toward (8) ---------- ---------------- home.

**Test 4**
**Complete the following dialogue using the words/ phrases given in the box. first one is done for you.**

**Sekar** : Good morning. Can I have (1) some information regarding the courses of study here, please?

**Officer** : (2) --------------- What courses are you interested in?

**Sekar** : I am interested in computer education (3) --------------, computer courses?

**Officer** : yes, we conduct many computer courses but (4) ----- ------------------- started.

**Sekar** : when will you recruit a new batch for (5) ------------------ next year.

**Officer** : It is at the beginning of the year. If you give me your address I will (6) -----------------

| | |
|---|---|
| 1) some in formation | 2) computer education |
| 3) With pleasure | 4) they have already started |
| 5) let you know | 6) do you have any |

**Test 5**
Solve the following problems by writing down the correct number of the words in the bracket against the statements.

| | | |
|---|---|---|
| 1) hospital | 2) Library | 3) aerodrome |
| 4) railway station | 5) bus halt | 6) laboratory |

a) Rathi wants to go to Jaffna from Kondavil by bus. Where will she go to get the bus? ( )

b) Mrs. John's son is seriously ill. Where should she take him for treatment? ( )

c) You want to do an experiment in science. Where will you do it? ( )

d) Mr.Sivayogan wants to go to London by flight No. UL 91. Where will he have to go? ( )

e) Sheela wants to go to Colombo from Jaffna by train. Where will she go to board the train? ( )

**Test 6**
Read the followig information about Kumar and complete his bio - date given below.

London

20 years 4 months

14 August 1988

Rs. 10, 000 per month

Kumar william

21/6, down lane, London

3 passes at G.C.E (A/L) Maths

One year as audit clerk, at L.L.C.Company

High School London

Mr.S.Tharmaraja, Principal High School, London

1. Name in full: ------------------------------------------------
2. Nationality : ------------------------------------------------
3. Date of birth: ------------------------------------------------
4. Private address: ------------------------------------------------
5. School attended : ------------------------------------------------
6. Age : ------------------------------------------------
7. Qualifications: ------------------------------------------------
8. Work expected: ------------------------------------------------
9. Salary expected: ------------------------------------------------
10. Name and address of referee : ----------------------------------

**Test 7**

Fill in the blanks by using following words.

1) how much 2) why 3) how often
4) when 5) how 6) who

1) ------------------------ did you pay for this shirt?
(Eight hundred rupees)

2) ------------------------ did you come yesterday ?
(by bus)

3) ---------------------- did you come yesterday?
(to meet your father)

4) ------------------------ do you come to colombo?
(once a month)

5) ------------------------- will you come again?
(at the end of this month)

**Test 8**

Imagine that you are the officer in charge of Liberty Club. You want to conduct a meeting to prevent the environmental pollution. You have the responsibility to invite Mr.Ponniah, a professor attached to the University of Peradeniya to give a speech on "noise pollution" . Write a letter to him, stating the time and venue of the function.

-----------------------------------------------------------------
-----------------------------------------------------------------
-----------------------------------------------------------------

**Test 9**

Imagine that you are Mr.Ponniah, a professor attached to the University of Peradeniya. Write a reply to the officer in charge, Liberty Clou Colombo - 5, stating your inability to participate in the meeting which will be conducted in Colombo.

-----------------------------------------------------------------
-----------------------------------------------------------------
-----------------------------------------------------------------

**Test 10**

**Use the following information to complete the chart given below. The first one is done for you.**

| | |
|---|---|
| 3 rd December | from 9.00 to 11.30 am |
| Hilli Auditorium | A speech by student of Grade 10 |
| A.G.A.Poththuvil | Secretary of English Union |
| S.T.Dharsan | Welcome dance by Grade 11 students |
| School Anthem | |

**English day - Poththuvill Hindu College**

1. Date - 3rd December
2. Time - ------------------
3. Venue - ------------------
4. Chief Guest - ------------------
5. Welcome address - ------------------
6. Number of programmes - ------------------
7. Welcome dance by - ------------------
8. A speech by - ------------------
9. End of the programme - ------------------
10. Vote of thanks by - ------------------

**Test 11**

Read the following instructions and group them under the correct headings.

A. Play on the road
B. Walk on the pavement
C. Drive carlessly
D. Fight with your friend on the road.
E. Walk on the left side on the road.
F. Walk on the right side on the road.
G. Drive on the left side on th e road.
H. Drive carelessly
I. Toot the horn near a hospital
J. Cross the road on the pedestrian crossing.

| Correct | Incorrect |
|---|---|
| | |
| | |
| | |
| | |

**Test 12**

Write a replya to this note

**Kokuvil west,**
**Kokuvil.**
**2nd March 2008**

Dear Ruban,

Next Tuesday is my 16th birthday. On that day there will be a party at 4.30 p.m at my home. So I like to invite you for the party.

Thank you

With love,
Murugan.

-----------------------------------------------------------------
-----------------------------------------------------------------
-----------------------------------------------------------------

**Test 13**

Read the following description and enter the information in the grid given below.

**My Village**

My village is Pannalai. It is a small village in the Jaffna. district. There are nearly 250 families in my village. Most of the villagers are farmers. They grow paddy, vegetables and fruits there. There are several Government buildings in my village . The Co-operative shops. rural banks, Main post office and the hospital are some of them.

**There is an ancient temple too in my village. This comes under the purivew of the tellipalai divisional secretariat.**

1. Name of the village - ---- --------------------------
2. District - ------------------------------
3. Divisional secretariat- ------------------------------
4. Number of families - ------------------------------
5. Government buildings - ------------------------------

**Test 14**

Put the following jumped words in the correct order.

First one is done for you

1. can't / you / come / meet / to / my parents.
<u>You can't come to meet my parents</u>
2. like / would / you / cup / a / tea/ ?/
------------------------------------------------------------
3. is / where / page / the / designed/ ?/
------------------------------------------------------------
4. setting / done/ is / type/ the sub/ by/ editors
------------------------------------------------------------
5. a / meeting / hold/ the / in / class
------------------------------------------------------------
6. some/ get / to/ students / reporters/ be
------------------------------------------------------------

# இந்துக்களின் பண்டிகைகளில் ஆடிப்பிறப்பின் மகிமை



தமிழர்கள் பண்டிகைகளை கொண்டாடுவதற்கு பல காரணங்களும் அர்த்தங்களும் உள்ளன. ஒற்றுமை உணர்வு, விருந்தோம்பல், அறிவுடமை, நன்றியறிதல் முதலியவற்றை முன்னிறுத்தி பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன.

தமிழர்கள் பண்டிகைகள் மூலமாக தமது சமூக கட்டமைப்பை ஏற்படுத்தி உள்ளனர் என்றால் அது மிகையாகாது.

அந்தவகையில் ஆடிமாதத்தின் முதல் நாளைக் கொண்டாடும் அடிப்பிறப்பு பண்டிகை தமிழர்களிடையே சிறப்பாக கொண்டாடப்பட்டுவருவது வழக்கமாகும் இந்தவருடம் நாளை வியாழக கிழமை ஆடிப்பிறப்பு கொண்டாடப்படுகிறது.

ஆடிமாதம் தேவர்களின் மாதக்கணக்கில் பகல் முடிந்து இரவு தொடங்குகின்ற காலமாகும்.

அதாவது உத்தராயணம் (பகல் பொழுது) கழிந்து தட்சணாயனம் (இரவுப பொழுது) ஆரம்பமாகின்ற காலமாக ஆடிமாதப் பிறப்பு அமைக்கின்றது. ஆடி மாதத்தின் முதல் நாள் உறவினர்கள் யாவரும் ஒன்று கூடி ஆடிக்கூழ் என்ற உணவினை காய்ச்சி ஒன்றாக கூடி இருந்து உண்டு மகிழ்வார்கள். கொழுக்கட்டை அவித்து உண்டு மகிழ்வதும் இந்நாளில் தான்.

'ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே கூழும் பனங்கட்டியும் கூடிக் குடித்துக் குலாவிடலாம்' என்று வருகின்ற நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பாடல் இதற்கு சான்றாக அமைகின்றது.

ஆடி மாதத்தின் முதல் நாளில் கூழ் காய்ச்சி மகிழ முடியாதவர்கள் ஆடி மாதத்துக்குள் ஏதாவது ஒரு நாளில் கூழ் காய்ச்சி குடித்து கூடியிருந்து மகிழ்வார்கள்.

ஆடி மாதம் அம்மனுக்குரிய மாத மாகையால் பல அம்மன் ஆலயங்களில் திருவிழாக்கள் களைகட்டும். குறிப்பாக தென்னிந்தியாவில் ஆடிமாதம் முழுவதும் அம்மனுக்கு பாரிய அளவில் அபிஷேக ஆராதனைகள் இடம்பெறுகின்றன.

எனினும் நம் நாட்டிலும் குறிப்பாக வடபகுதியில் நயினை நாகபூஷணி அம்மன், தெல்லிப்பளை துர்க்கையம்மன் ,மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயங்களில் விசேட திருவிழாக்கள் இடம்பெறுகின்றன.

ஆடிமாதத்தில் வருகின்ற அமாவாசை நாள் பிதிர்க்கடன் நிறைவேற்றப்படுகின்ற நாளாகும். இறந்த தந்தையரை நினைத்து அந்நாளில் குடும்பமாக சேர்ந்து விரதம் இருந்து பிதிர்க்கடன் நிறைவேற்றப்படுகின்றது.



மேலும் ஆடிமாதம் அம்மன் வழிபாட்டிற்கு உகந்த மாதமாகையால் பெண்கள் அம்மனை வேண்டி இம் மாதத்தில் விரதமிருப்பது சிறந்ததாகும். இத்தகைய சிறப்புக்களையுடைய ஆடி மாதத்தின் ஆரம்பநாள் ஆடிப்பிறப்பு என்று கொண்டாடப்படுகிறது.

பண்டிகைகள் கொண்டாடப்படுவதன் நோக்கங்களை உணர்ந்து அப்பண்டிகைகளைக் கொண்டாடவேண்டியது இந்துக்கள் ஒவ்வொருவரதும் கடமை ஆகின்றது.

வெறும் களியாட்டங்களில் மட்டுமே கவனத்தைச் செலுத்தாமல் பக்தியுடன் கடமையை உணர்ந்து பண்டிகைகளை கொண்டாடுவோம்.

— — — — — —

பூ.நகுலன்

# யாழ்.பஸ் நிலையத்தில் இடம்பெறும் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த இரண்டு நாட்களாக யாழ். பஸ் நிலையப் பகுதியில் நடைபெற்றுவரும் பிரச்சினைகளுக்கு சுமூகமான முறையில் தீர்வு காண்பதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சார்பில் அமைச்சரின் ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி. குகேந்திரன் (வி.கே. ஜெகன்) யாழ் பஸ் நிலையப் பகுதிக்கு நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டார்.



யாழ்ப்பாணம் போக்குவரத்து சாலை உத்தியோகத்தர்களுக்கும் தனியார் போக்குவரத்து துறையினருக்கும் இடையில் நடைபெற்று வந்த முரண்பாடு பெரும் பிரச்சினையாகி அடிதடியில் முடிந்த நிலையில் இருவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். இதனால் மிகவும் மேசமாக மாறக்கூடிய நிலை அப்பகுதியில் காணப்பட்டதைத் தொடர்ந்தே ஒருங்கிணைப்பாளர் அப்பகுதிக்கு சென்று மத்திய பஸ் நிலைய பகுதிக்குள் பழம் மற்றும் மணிக்கடை வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகள், போக்குவரத்து சாலை ஊழியர்கள் ஆகியோருடன் பேசினார் வியாபாரிகளை வெளியேற்ற வேண்டும் எனக் கோரி போக்குவரவுத் துறை ஊழியர்கள் மேற்கொண்ட பிரச்சினைகளுக்கு சுமூகமான முறையில் தீர்வும் காணப்பட்டது.

அரச மற்றும் தனியார் போக்குவரவுத் துறையினரது பிரச்சினைக்குள் பழக்கடை வியாபாரிகள் மற்றும் ஆட்டோ சாரதிகள் தலையிடுவதை அனுமதிக்க முடியாது எனவும் அவ்வாறு இனியும் அவர்கள் தலையீடு செய்தால் சட்டத்தின் முன் கொண்டுசெல்லப்படுவதுடன் பஸ் நிலையப் பகுதியிலிருந்து வெளியேற்றப்பட வேண்டிய நிலைமையும் ஏற்படும் எனவும் ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை திருமுறை மனனப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையார்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகம் சைவச்சிறார்களின் மனனம் செய்யும் ஆற்றலையும், சைவ சமய அறிவையும் விருத்தி செய்யும் பொருட்டு சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையை முன்னிட்டு திருமுறை மனனப்போட்டியை நடத்தவுள்ளது.

இப்போட்டி தரம் 1,2 பாலர் பிரிவிலும், தரம் 3,4 கீழ் பிரிவிலும் நடாத்தப்படவுள்ளது.

பாலர் பிரிவிற்கு "நத்தார் படை ஞானன்பசு", "பொன்னார் மேனியனே" ஆகிய இரு திருமுறைகளும், கீழ்ப் பிரிவிற்கு "பித்தாபிறைசூடி பெருமானே", " மாற்றுப்பற்று எனக்கு இன்றி நின் திருப்பாதமே" ஆகிய இரு திருமுறைகளும் மனனம் செய்யப்படல் வேண்டும்.

திருமுறை மனனப் போட்டி எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்பமுடிவுத் திகதி எதிர்வரும் 19 ஆம் திகதியாகும்.

பரிசில்கள் ஆகஸ்ட் 3 ஆம் திகதி சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை அன்று வழங்கப்படும்.

மேற்படி திருமுறை மனனப்போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவசமய அபிவிருத்திக் கழக அறிவகம் இல.82 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் பி.ப.3 மணி முதல் 5 மணி வரை தொடர்புகொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என சைவசமய அபிவிருத்திக்கழக பரீட்சை செயலரும், சமய பிரசாரகருமான சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் சிறப்புச் சொற்பொழிவு

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

இதன்படி நாளை மறுதினம் வெள்ளிகிழமை மு.ப 10.30 மணியளவில் தேவி பாகவதம் என்னும் விடயம் பற்றி வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் சொற்பொழிவாற்றவுள்ளார்

# பாடசாலைகளில் ஆடிப்பிறப்பு நிகழ்வு

ஆடிப்பிறப்பு பண்டிகை நாளை வியாழக்கிழமை கொண்டாடப்படவுள்ள நிலையில் பாடசாலைகளிலும் இத்தினத்தை சிறப்பாக கொண்டாட வடமாகாண கல்வி அமைச்சினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி கல்வி அமைச்சினால் சுற்றுநிருபம் ஒன்றும் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் சுற்று நிருபத்திற்கமைய பாடசாலைகள் ஆடிப்பிறப்பு கொண்டாட்டத்தை மகிழ்ச்சியுடன் கொண்டாட அதிபர்கள் ஆவன செய்ய வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (66)



கரணவாய் ஜே/350 கிராம அலுவலர் பிரிவில் சுகாதாரப் பிரிவினரால் அண்மையில் முன்னெடுக்கப்பட்ட டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கை

(18)


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................................

முகவரி :- ..............................................

பிறந்த ஆண்டு :- ..............................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# கிளி.விவசாய, பொறியியல் பீடங்களுக்கு இந்திய அரசின் 600 மில்லியன் உதவி

## உடன்படிக்கை கைச்சாத்து



யாழ்.பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் பொறியியல் பீடங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அமைப்பதற்கு இந்தியா 600 மில்லியன் ரூபா நன்கொடை உதவியை வழங்க முன்வந்துள்ளது.

கிளிநொச்சியில் அமைக்கப்படும், இந்த இரண்டு பீடங்களுக்குமான நிதி உதவியை வழங்கும் புரிந்துணர்வு உடன்பாடு நேற்று முன்தினம் கொழும்பில் கையெழுத்திடப்பட்டது.

இந்தியத் தூதுவர் வை.கே. சின்ஹா, உயர்கல்வி அமைச்சின் செயலர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன இந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர்.

இந்தத் திட்டத்தின் கீழ், இரு பீடங்களுக்குமான உட்கட்டமைப்பு வசதிகளை இந்தியா செய்து கொடுக்கவுள்ளது.

விவசாய பீடத்துக்கு, விரிவுரை மண்டபங்கள், ஒரு மாநாட்டு மண்டபம், கணனி ஆய்வகம், நூலகம், மற்றும் விளையாட்டுத் தளத்தொகுதி என்பனவும், பொறியியல் பீடத்துக்கு, விரிவுரை மண்டபங்கள், ஒரு மாநாட்டு மண்டபம், ஆய்வகங்கள், நிர்வாக பணியகம், பணியாளர் அறை என்பனவற்றையும் இந்தியா அமைத்துக் கொடுக்கவுள்ளது.

இதற்காக 600 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது.

இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதை, இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா மற்றும் உயர்கல்வி அமைச்சின் செயலர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன ஆகியோர் இணைத் தலைமை தாங்கும், குழுவினால் மேற்பார்வை செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



இந்திய விமானப்படைத் தளபதி எயார் சீப் மார்ஷல் அருப் ரஹா நேற்றைய தினம் நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்தடைந்தார். அவரை இலங்கை விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் கோலித குணதிலக வரவேற்றார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ முப்படைத் தளபதிகளையும் அவர் சந்திப்பார்.

# பிரதேச செயலரின் பெயரால் பாரிய நிதி மோசடி

## விழிப்புணர்வுடன் செயற்படக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலரின் பெயரைப் பயன்படுத்தி நடைபெற்ற நிதி மோசடிகள் சில இப்போது அம்பலமாகியுள்ளது.

யாழ்.நாவாந்துறையைச் சேர்ந்த யுவதி ஒருவர் இந்த நிதி மோசடியில் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருப்பது இப்போது உறுதியாகியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக யாழ். பிரதேச செயலர் பொது மக்களுக்கான அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம், நாவாந்துறை சூரியவெளியைச் சேர்ந்த யேசுதாசன் மேரி ஆன் புளோரிடா (சுதர்சினி) என்பவர் யாழ்ப்பாணப் பிரதேச செயலராகிய திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் ஆகிய எனது பெயரைத் துஷ்பிரயோகமான முறையில் பயன்படுத்தி, பொது மக்களிடமிருந்து வங்கியில் கடன் பெற்றுத் தருவதாகக் கூறிப் பெருமளவு பணத்தைப் பெற்றுக் கையாடல் செய்துள்ளதாக எனக்குப் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

மேற்படி நபருக்கும், எனது பெயரைத் துஷ்பிரயோகமாகப் பயன்படுத்தி இவர் வாங்கிய பணத்திற்கும் எதுவித தொடர்பும் இல்லை எனவும், மேலும் இவர் தொடர்பாக ஏதேனும் முறைப்பாடுகள் இருப்பின் யாழ். பொலிஸ் நிலையத்துடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுமாறும் பொதுமக்களிடம் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்வாறான ஏமாற்றுப் பேர்வழிகள் எமது பிரதேசத்தில் அதிகம் நடமாடுவதால் பொது மக்களாகிய நீங்கள் மிகவும் விழிப்பாக இருக்குமாறும் நியாயமாகக் கேட்டுக்கொள்கிறேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வேள்வியில் பலியிடப்படும் ஆடுகளை

# தலையில்லாமல் கொண்டு செல்ல தடை விதித்தது பிரதேசசபை

யாழ். நவாலி காத்தவராயர் ஆலயத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி இடம்பெறும் வேள்வியில் வெட்டப்படும் ஆடுகள் தலையில்லாத நிலையில் வெளியில் கொண்டு செல்வது தடை செய்யப்பட்டுள்ளதாக வலி.தென் மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் ச.சிவகுமார் நேற்றைய தினம் தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியினால் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைக்கமைய வெட்டப்படும் ஆடுகள் ஆலய வளாகத்திற்குள் வைத்து இறைச்சியாக்கிய பின்னர் சுகாதார வைத்திய அதிகாரியினால் சீல் வைக்கப்பட்ட பின்னரே வெளியில் எடுத்துச் செல்ல முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேற்படி ஆலயத்தில், 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்கப் பிரதேச சபைச் சட்டத்திற்கமைய கொல்களம் அமைத்து, ஒவ்வொரு ஆடாக வெட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோரின் அனுமதி பெறப்பட்ட பின்னரே ஆடுகள் வெட்டப்படும். அவ்வாறு வெட்டப்படும் ஆடுகளை ஆலய வளாகத்தில் வைத்து உரித்து இறைச்சியாக்கிய பின்னர், கழிவுகளை அங்கு நிற்கும் பிரதேச சபையின் வாகனத்தில் போடவேண்டும் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, இந்த நடைமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சட்டத்தரணிகள் சங்கத் தலைவருக்கு உயிருக்கு அச்சுறுத்தலென முறையீடு

தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் உபுல் ஜயசூரிய தெரிவித்துள்ளார். மோட்டார் சைக்கிளில் இரண்டு பேர் நேற்றைய தினம் தம்மை பின்தொடர்ந்ததாகத் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை 4.00 மணியளவில் நீதிமன்றிலிருந்து திரும்பிய போது இனந்தெரியாத மோட்டார் சைக்கிள்தாரிகள் தம்மை பின்தொடர்ந்தனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஊடக சந்திப்புக்களை நடாத்துதல், ஊடக அறிக்கைகளை வெளியிடுதல் போன்ற நடவடிக்கைகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைக்கு எதிராக கருத்து வெளியிட்டதன் பின்னரே இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தமது காரியாலயம் வரையில் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் பின்தொடர்ந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக உபுல் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

# புலிகளை மீளவும் உயிர்ப்பிக்க அமெரிக்கா, பிரிட்டன் முயற்சி

## அமைச்சர் பவித்ரா குற்றச்சாட்டு

(கொழும்பு)

முப்பது ஆண்டுகால யுத்தம் நிறைவடைந்துள்ள இலங்கையில் மீளவும் விடுதலைப்புலிகளை உயிர்ப்பிப்பதில், அமெரிக்காவும், பிரிட்டனும் ஆர்வம் காட்டி வருவதாக மின்வலு எரிசக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி குற்றம் சாட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்களின் வாக்குகளை பெற்றுக் கொள்ளும் நோக்கிலும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும், பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனும் புலிகளுக்கு ஆதரவளித்து வருகின்றனர்.

விடுதலைப் புலி ஆதரவாளர்களின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ற வகையில் ஒபாமாவும், கமரூனும் இலங்கைக்கு எதிராக செயற்பட்டு வருகின்றனர் மேற்குலக நாடுகளின் சில அரசியல்வாதிகள் தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்களின் வாக்குகளினால் தெரிவாகியுள்ளனர்.

எவ்வாறெனினும், மீண்டும் நாட்டில் பயங்கரவாதம் தலைதூக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இடமளிக்க மாட்டார் மீண்டும் நாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் செயற்படுவதற்கு ரணில் விக்ரமசிங்கவே அனுமதிப்பார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

16-07-2014 புதன்கிழமை, காலை 06.30 தொடக்கம் 07.30 மணிவரையான காலப்பகுதியில் நடைபெறும்

மங்கலகரமான திறப்பு விழா

TONER HOUSE

(C/3430) அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

No. 195/3, Parameswara Junction, Palaly Road, Thirunelvely, Jaffna. Mob: 0775 427 426



வருகின்ற வருமானம் போதாதா?

20,000/= - 38,000/= க்கும் மேற்பட்ட சம்பளத்துக்கு நிரந்தரமான தொழிற்சாலைகளான ஜேம், பிஸ்கட், சொக்லேட், ஐஸ்கிறீம், கிளவுஸ், சிமெந்து, சீட், டயர் ஆகிய நூர் உற்பத்திக்கு பொருட்கள் பெக்கிங் பழுதுபார்த்தல், ஸ்டோர்ஸ் ஆகிய பிரிவுக்கு 18 - 55 வயதான ஆண், பெண் தேவை. சாப்பாடு, பாதுகாப்பான தங்குமிட வசதி உண்டு. சிங்களம் கட்டாயம் இல்லை. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா முன்னுரிமை. தம்பதிகள், நண்பர்கள் ஒரே இடத்தில் குழுக்களாக வருகின்ற தினமே சேர்த்துக்கொள்ளப்படுவர். (0775964299)

(C/3735)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூலை 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.